# போர்வாள்

வாள் 3]  5-8-50  [வீச்சு

## வேதனையும் களிப்பும்




ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அ

# அன்று முடியாத செயல், இன்று முடிந்த இரகசியம்!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதுபோன்ற ஒரு அபிப்பிராயமே அநேகருக்கு இருந்து வருகிறது. தென்னிந்தியாவில் ஏதோ அக்கிரமம் நடப்பது போல, அநேக பத்திரிகைகளில் உள்ள நமது தென்னிந்திய நண்பர்கள் இடைவிடாது பிரசாரம் செய்து வருகிறார்கள். எனவே உண்மை நிலைமை இன்னதென்று தெரிந்திருக்க வேண்டியவர்களுக்குக் கூட இதில் பெரிய குழப்பம் இருந்து வருகிறது. அப்படி அக்கிரமந்தான் நடக்கிறதோ என்று சந்தேகித்தும் விடுகிறார்கள்!"

காங்கிரஸ் ஏடு "தினசரி"யே இவ்வளவு ஆத்திரத்துடனும் ஆவேசத்துடனும் எழுதுகிறதென்றால், உண்மையில் ஆதிக்க வகுப்பினர் கல்வித் துறையிலும் உத்தியோக மண்டலத்திலும் தங்கள் ஏகபோக உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்காகச் செய்து வந்திருக்கிற சூழ்ச்சியும் பொய்ப் பிரசாரமும் எவ்வளவு அதிகம் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. நண்பர்களே அதைக் கணக்குப் போட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வளவு சூழ்ச்சியும் பிரசாரமும் செய்தாங்கூட, ஆதிக்க வகுப்பினர், புதிய அரசியல் திட்டம் வகுக்கப்படும் வரை, தங்கள் திட்டத்திலே சிறிதும் வெற்றிபெற முடியவில்லை. அவர்களுடைய வகுப்பினரே சென்னை மாகாணத்தின் முதலமைச்சர்களாகக் கொலுவீற்றிருந்த காலத்தில்கூட, அதாவது ஆச்சாரியார் சகாப்தத்திலும் பிரகாசம் காரு காலத்திலுங்கூட, அவர்களால், கம்யூனல் ஜி. ஓ. வை முறியடிக்க முடியவில்லை.

இருபது ஆண்டுகளாக எவ்வளவோ முயன்றும் முடியாத காரியம், எத்தனையோ சூழ்ச்சிப் பொறிகளை அமைத்துப் பார்த்தும் ஆகாத காரியம், குறுகிய புத்தி என்றும் வகுப்புத் துவேஷம் என்றும் நாஸ்திக வாதம் என்றும் பற்பல தூற்றல் பாணங்களைத் தொடுத்துப் பார்த்தும் நடவாத காரியம், அவர்களுடைய இனத்தவரே பிரதமர் பீடத்தில் வீற்றிருந்த வேளைகளிலும் இயலாத செயல், இன்று, மிக எளிதாக, சட்டத்திலே காணப்பட்ட ஒரு சிறு இரக்கு வழியாக செய்து முடிக்கப்பட்டு விட்டது.

முன்னர், எவ்வளவோ பாடுபட்டும் முறியடிக்கப்பட முடியாத ஜி. ஓ. இன்று ஒரு சட்டத் தீர்ப்பு மூலமாக ஒரே நாளில் சடசடவென்று சரிந்துவிட்டது.

என்ன காரணம் இதற்கு?

முன்னரெல்லாம், இந்த ஜி. ஓ. இருப்பதும் இல்லாமல் போவதும் சென்னை சட்டசபையின் விருப்பத்தைப் பொறுத்திருந்தது. இன்று, அது டில்லியில் வகுக்கப்பட்ட ஒரு சட்டப் புத்தகத்தின் தயவைப் பொறுத்து உயிர்வாழ வேண்டிய பிரச்சினையாகி விட்டது.

அன்று, இந்தப் பிரச்சினையைப் பற்றிய அதிகாரம் சென்னைக்கு இருந்தது.

இன்று, அந்த அதிகாரம், வேறு பல அதிகாரங்களைப் போலவே, சென்னையிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டு விட்டது—இந்திய அரசியல் திட்டம் என்னும் ஒப்பந்தத்தின் மூலமாக.

கம்யூனல் ஜி. ஓ. பற்றிய அதிகாரம் சென்னை ஆட்சியாளர்களிடம் இருந்தவரையிலே, ஆதிக்க வாதிகளால் அதனை அணுவளவும் அசைக்க முடியவில்லை. ஆனால் அந்த அதிகாரம் டில்லி நகருக்கு மாறியதும், அவர்களால், தங்கள் நெடுங்காலக் கனவை நடைமுறைக்கிதமாக மாற்றி அமைக்க முடிந்துவிட்டது.

சென்னை மாகாணத்து ஆட்சி யாரிடம் இருந்தாலும் சரி; அது ஆரிய இனத்தவரிடமே இருந்தால்கூட சரியே, சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, திராவிடரின் எண்ணம்தான் நாட்டை ஆளும். ஆரியர் ஆர்ப்பாட்டத்திற்கு அதிக செல்வாக்கு இராது. ஆனால் அகில இந்திய சர்க்காரிலோ ஆரியருக்குத்தான் செல்வாக்கு இருக்க முடியும்; இருக்கவும் இருக்கிறது. திராவிடர் குரல் அவ்வளவு தூரம் செல்ல முடியாது, செல்வதும் இல்லை. எனவேதான் சென்ற இருபது ஆண்டுகளாக தொடர்ச்சியாக தோல்விக் கீதமே பாடிவந்த கனபாடிகள் வர்க்கம், இப்போது முதல் முறையாக வெற்றிச் சிந்து இசைக்க முடிந்தது. சுருக்கமாகச் சொல்வதானால், திராவிட நாடு, தனி அரசாக அமையாமல் டில்லிபுரியுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதுதான் இந்த வெற்றிக்கான மூல காரணம்.

புதிய அரசியல் திட்டத்தை எழுதி முடித்து, அதை, அரசியல் அமைப்பு மன்றத்தில் சமர்ப்பிக்கும் பணியை ஆற்றிய **திட்டம் தீட்டும் குழுவில்** (Drafting Committee). தென்னாட்டின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இரண்டே பேர்தான். இருவருமே பிராமண குலத்தவர்கள்! ஒருவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். மற்றவர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர். இங்ஙனம் தென்னாட்டுப் பிரதிநிதிகள் இருவருமே பிராமண குலத்தவர்களாக இருந்துவிட்ட காரணத்தாலும், அவர்கள் இருவருக்குமே தங்கள் இனப்பற்று அதிகம் ஆதலாலும், அந்தக் குழுவிலிருந்த ஏனைய நான்கு உறுப்பினர்களும் வடநாட்டவர்கள் ஆதலின், அவர்கட்குத் தென்னாட்டின் பிரச்சினைகளைப்பற்றி நுணுக்கமான கவலை இராது ஆதலாலும், இந்த இருவரும், வேண்டுமென்றே, கம்யூனல் ஜி. ஓ. வுக்கு மாறுபடும் விதத்திலே, அரசியல் திட்டத்தின் இது பற்றிய பகுதியை அமைத்திருக்கக் கூடும் என்று திராவிடர்களிடையே ஒரு பலமான கருத்து நிலவி வருகிறது. "இவர்கள் இப்படி வேண்டுமென்றே திராவிட சமுதாயத்திற்குக் கேடு விளைக்கும் வகையில் அரசியல் திட்டத்தை அமைப்பார்கள் என்று தெரிந்திருந்தால், இவர்களை எங்கள் சார்பில் அரசியல் மன்றத்திற்கு அனுப்பியிருக்கவே மாட்டோமே, எங்கள் செயலின் முடிவு விபரீதமாக அமைந்துவிட்டதே, எங்களால் அனுப்பப்பட்ட இவர்கள் எங்கள் இன இளைஞர்களின் கல்விக்கே உலைவைக்கும் முறையில் திட்டத்தைத் தீட்டிவிட்டு வந்து வழக்காடவும் செய்கிறார்களே!" என்று எண்ணி எண்ணி, சென்னை காங்கிரஸ் திராவிட எம். எல். ஏக்களில் பலர் மிகவும் வருந்துவதாகச் சொல்லப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகள்—கருத்துகள்—நிகழ்ச்சிகள் அவ்வளவையும் ஒன்றாக வைத்துப் பார்க்கும்போது, பார்ப்பன இனத்தவர் இப்போது பெற்றுள்ள வெற்றி

# பார்ப்பனர்க்கா இடமில்லை? யார் அப்படி புகல்வது?

நேர்மையின் விளைவல்ல—சூழ்ச்சி யின் குழந்தை என்பது தெளிவாகிறது.

இப்படி யெல்லாம் சூழ்ச்சி செய்து, கம்யூனல் ஜி. ஓ. வை ஒழித்தாக வேண்டிய அளவுக்கு, பார்ப்பன இனத்தவர்க்கு, அந்த ஜி. ஓ. மீது ஆத்திரம் பிறக்கக் காரணமென்ன? ஜனத்தொகைப் படி நியாயமாக அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்கைக் கொடுக்க முடியாது என்று கூறுகிறதா கம்யூனல் ஜி. ஓ? பிராமணர்களுக்குக் கல்வி நிலையங்களில் இடமே கிடையாது என்று கூறுகிறதா? ஏதேனும் அநீதியான தீர்ப்பை வழங்குகிறதா அந்தத் திட்டம்?

இல்லை! இல்லவே இல்லை! அவர்களுக்கு நியாயமாகச் சேரவேண்டியதைவிட அதிகமாக, மிக அதிகமாக, 5 மடங்குக்கும் அதிகமாக உரிமை அளிக்கிறது அந்த ஜி. ஓ.

[1941 சென்சஸ் கணக்கு]

### மக்கள் தொகை
(சத விகிதத்தில்)

| | |
|---|---|
| பார்ப்பனர் | 2·7 |
| பார்ப்பனரல்லாதார் | 67·7 |
| ஆங்கிலோ இந்தியர்களும் கிறிஸ்தவர்களும் | 4·4 |
| முஸ்லிம்கள் | 7·8 |
| ஆதித்திராவிடர் | 16·3 |

இந்தக் கணக்குப்படி, பார்ப்பன இனத்தவருக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு 100-க்கு 3-கம்யூனல் ஜி. ஓ. அவர்களுக்கு எவ்வளவு ஸ்தானங்களை அளிக்கிறது?

### கம்யூனல் ஜி. ஓ. அளிக்கும் ஸ்தானங்கள்

| | |
|---|---|
| பார்ப்பனர் | 14·3 |
| பார்ப்பனரல்லாதார் | 57 |
| கிறிஸ்தவர்கள் | 7·2 |
| முஸ்லிம்கள் | 7·2 |
| ஆதித்திராவிடர் | 14·3 |

இந்த இரண்டு புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பிராமண குலத்தவர்க்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய ஸ்தானங்கள் 100-க்கு 3-ஆக இருக்க, ஜி. ஓ. படி அவர்களுக்குக் கிடைப்பது 100-க்கு 14 என்பதும், பிராமணரல்லாதாருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியது 100-க்கு 67·7 ஆக இருக்க, ஜி. ஓ. படி கிடைப்பது 57 தான் என்பதும் நன்குவிளங்கும். விளக்கமாகச் சொல்வதானால், பிராமண இனத்தவருக்கு, கிடைக்கவேண்டியதைவிட, 5 மடங்கு அதிகமாகவும், அல்லாதாருக்கு, கிடைக்கவேண்டியதைவிட கொஞ்சம் குறைவாகவுமே கிடைக்கிறது. ஜி. ஓ. படி.

ஜி. ஓ. உத்தரவுப்படி பிராமணருக்குக் கிடைக்கவேண்டியது 14 ஸ்தானங்கள் என்றாலும், நடைமுறையில், இன்னமும் அதிக இடங்கள் அவர்களுக்குக் கிடைத்து விடுகின்றன. ஆதித்திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 14 ஸ்தானங்களுக்குப் போதுமான அளவு ஆதித்திராவிட மாணவர்கள் முன்வராதபோது, அவர்களுடைய பங்கிலே மிச்சமிருக்கும் இடங்களும் பிராமண மாணவர்கட்கே தரப்பட்டு விடுகின்றன. எடுத்துக் காட்டாக, எஞ்சினீரிங் கல்லூரியில், 1950—51-ம் ஆண்டிற்கு சேர்க்கப் பட்டுள்ள மாணவர்களின் புள்ளி விவரத்தைப்பார்த்தால், இது நன்கு விளங்கும்.

### எஞ்சினீரிங் கல்லூரி
(சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் புள்ளி விவரம்)

| | நூற்றுக்கு |
|---|---|
| பார்ப்பனர் | 20 |
| பார்ப்பனரல்லாதார் | 58 |
| கிறித்தவர் | 8 |
| முஸ்லிம் | 7 |
| ஆதித்திராவிடர் | 7 |

இந்த மூன்று புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜனத்தொகைப்படி பார்ப்பனருக்குக் கிடைக்கவேண்டிய இடங்கள் 3 என்பதும், ஜி. ஓ. படி அவர்கட்குத் தரப்பட்டுள்ள இடங்கள் 14 என்பதும், ஆனால் உண்மையில் அவர்கள் பெறும் இடங்கள் 20 என்பதும் புலப்படும்.

### ஜனத்தொகை 100-க்கு 3
### பெறுகிற இடம் 100-க்கு 20

ஜி. ஓ. வின் படி பார்ப்பன இனம் அடைகிற இலாபம் இவ்வளவு! என்றாலும்கூட அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை.

| | |
|---|---|
| **கிடைக்கவேண்டியது** | **3** |
| **கிடைப்பது** | **20** |

என்றாலும் அவர்கள் மனம் சாந்தி பெற மறுக்கிறது. என்ன பேராசை!

இதோ மேலும் சில புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. கூர்ந்து கவனியுங்கள்.

சர்க்கார் கல்லூரிகள், சர்க்கார் உதவி பெற்று நடைபெறும் கல்லூரிகள் ஆகிய இவற்றில், ஒவ்வொரு வகுப்பிலும் பார்ப்பன இனத்தவர் பெற்றுள்ள இடங்கள் எத்தனை, அல்லாதார் பெற்றுள்ள இடங்கள் எத்தனை என்பதற்கான புள்ளி விவரம்:—

### 1948-49ல் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்க்கப்பட்டோர்
**பார்ப்பனர்.**

| | |
|---|---|
| ஜனத்தொகைப்படி கிடைக்க வேண்டிய இடம். 100க்கு | 3 |
| ஆனால், கிடைத்திருப்பது | 33·2 |
| **பார்ப்பனரல்லாதார்** | |
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 47·2 |

### 1949-50 இன்டர்மீடியட்

| | |
|---|---|
| **பார்ப்பனர்** | |
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 33·8 |
| **அல்லாதார்** | |
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 49·7 |

### 1948-49 பி. ஏ., பி.காம்

| | |
|---|---|
| **பார்ப்பனர்** | |
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 27 8 |
| **அல்லாதார்** | |
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 41·6 |

### 49-50 பி.ஏ., பி.காம்,

| | |
|---|---|
| **பார்ப்பனர்** | |
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 38 6 |
| **அல்லாதார்** | |
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 44·6 |

(6-ம் பக்கம் பார்க்க)

# "சோமநாதபுர வீழ்ச்சி"

[சரிதம் தழுவிய கற்பனைச் சித்திரம்]

தொகுத்தோன்: கு. தனபாலன்.

## அங்கம் 22.

இடம்: கூர்ச்சரத்தை அடுத்த பிரதேசம்.

[பீம்லிங் கருப்புடை அணிந்துகொண்டு தலையில் சிகப்பு குட்டையுடன் வீட்டிற்கு வருகிறான். அவன் மனைவி தங்கம் அவனை அதிசயத்துடன் பார்க்கிறாள்.]

பீம்: என்னடி. இது! நாட்டுப் புறத்தான் பட்டணப் பிரவேசம் பண்ண மாதிரி இருக்கு நீ பாக்கிற பார்வை!

தங்: ஐயே......இவரு பட்டணத்து பன்னாடை பணக்காரு! இதுகெட்ட கேட்டுக்கு என்னைவந்து நாட்டுப் பொறங்குது!

பீம்: அம்மா தாயே, நீ பட்டணத்துப் பொண்ணுதான். பட்டணத்து பொண்ணுதான். ஏற்கனவே கஷ்டமாயிருக்கிற எம் மனசை மேலு மேலும் இப்படி சித்திரவதை செய்யாதடி தாயே.........

தங்: எதுக்காக மச்சான் நாம் கஷ்டப்படணும் இனிமே, என்னமோ, மகராஜன் புண்ணியத்திலே நமக்கு நாலு காணி நிலமும் இருக்கு. அதுவும் உழைக்கிறவங்களுக்குத் தான் சொந்தமின்னு இருக்கு, அந்த ஊரிலே அவதிப்பட்டாப் போல இல்லாம, கண்ணுக்கு அழகாகவும், மனசுக்கு நிம்மதியாவும் வாழ்வை நடத்த வழி இருக்கும் போது நாம் ஏன் கஷ்டப்படணுங்கிறேன்? அதுசரி........... இதென்ன கரிப்பானை நிறத்திலே அங்கியும், இரத்தமான நிறத்திலே தலை குட்டையும் கட்டிக்கிட்டிருக்கே?

பீம்: தங்கம்.........நீ ஒரு பைத்தியம். இது எதுக்காக போட்டிருக்கேன்னு ...... இது துக்கத்துக்கு அறிகுறியாத்தான்.

தங்: எந்த துக்கத்துக்கு?

பீம்: எந்த துக்கத்துக்கா... சொல்றேன் கேளு. நீர் வளமும், நிலவளமும் நிறைஞ்சிருந்த நம்ம நாடு நம்ம மூதாதையர் பொறந்து வளர்ந்த நாடு, நம்ம தாய் நாடும், அதிலே வாழ்ந்து வந்த மக்களிலே பெரும் பாகம், நடுவிலே வந்த நாசகார கும்பலுங்க பேச்சை கேட்டு எல்லா விதத்திலும் அடிமையாகி, கடைசியிலே உயிரையும் எழக்கக்கூடிய அளவுக்கு வந்திடுச்சே என்றதை காட்டறதுக்குதான் கருப்பு உடை.........

தங்: அதுசரி, யாரு அப்படி உசிரை அனியாயமா இழந்துட்டாங்க?

பீம்: தங்கம் நீ ஒரு கிணத்து தவளை, வாய் மாத்திரம் இருக்கு......இது வரைக்கும்... துலுக்க ராசன் நம்மை ஊருக்குள்ளே நுழைச்சி, சோமநாதர் ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கி அதிலுள்ள பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு அங்கிருந்தவங்களையும் கைதியாக்கி தன் ஊரான ஆப்கனிஸ்தானத்திற்குப் போனான். அங்கிருந்த மகமதிய குரு என்ன சொன்னான் தெரியாதா? ஆண்களை போஷிக்கிறது நம்ம நபிநாயகத்திற்கு சம்மதமில்லை. ஆகையினாலே அவுங்களை எல்லாம் சாகடிச்சிடுன்னு உத்திர விட்டான். அந்த ராசனும் அப்படியே செஞ்சிட்டான். என்னதான் இருந்தாலும் அவுங்க நம்ம நாட்டு சகோதரர்களில்லையா? அனியாயமா அவுங்க இரத்தத்தை முன்னிட்டும், நம்ம நாடு அழிந்திருப்பதைக் காட்டும் பொருட்டுதான் இந்த கறுப்பு உடை.

தங்: அப்போ, தலையிலே ஏன் சிகப்பு துணி? இது ஆரிய சூழ்ச்சியாம் நம்மவர்கள் அடிமைப்பட்டு, காட்டிக் கொடுக்கப்பட்டு, மாளும் நிலை எதைக் குறிக்கிறது?

பீம்: இதுவா, இது மாதிரி, இன்னொரு முறை நடக்கக் கூடாது. நடக்கவும் விடப்படாது. அப்படி நடந்தா, இரத்தத்தை சிந்தியாவது அதை ஒழிக்க பாக்கணும். இப்பவே ரொம்பபேரு ஆரிய சூழ்ச்சியை உணர ஆரம்பிச்சிட்டாங்க. இந்த ஆரிய கிரகணம் முழுதும் எப்போ நீங்குதோ அப்போதான் இந்த கறுப்பு அங்கியை கழட்டி எறிவேன், அதுவரைக்கும் இந்த அங்கியையும் இந்த குட்டையும் தான் அணிவேன். அதிலே சந்தேகமே கிடையாது!

தங்: அடடே.........உங்களுக்கு மூளை இருக்குதின்னு இப்போதான் புரிஞ்சிகிட்டேன். ஒவ்வொன்றும் மகா யோசனையோடதான் நடக்கிறிங்க!

பீம்: யோசனையோட நடக்காம, உன்னெ மாதிரி ஆடு, பள்ளத்திலே கவிழறது போலவா நான் விழுவேன்? இனிமேல பாரேன்.........இவரு எப்படி இருக்க போறாருன்னு!

தங்: எப்படி இருப்பாராம்?

பீம்: எப்படியா?......இந்த ஊரிலே இருக்கிற மக்களுக்கு

ஆரியராலே..........ஒரு நல்லா இருந்த நாடு எப்படி அழிஞ்சி ஒழிஞ்சி நாசமா போச்சுங்கிறதையும், ஆரியனுடைய கடவுளை கும்பிட்டதாலே அந்த நாட்டிலே வாழ்ந்த மக்கள் கடைசியில் எப்படி உயிரிழக்க நேரிட்டதென்பதையும், நானே சொல்லி அவுங்களை திருத்தம் செய்யப் போரேன். இப்பவே கொஞ்சம் பேரை திருத்திட்டேன். இன்னும் போகப போக தன்னாலே எல்லாம் திருத்திக்குவாங்க.........

தங்: செய்யிறது என்னமோ நல்ல காரியந்தான்...... ஆனா சாக்கிரதையாய் பேசி நடந்துக்கோ.........இது எப்படின்னா உன் உசிருக்கு நீயே உலை மூட்டிக்கிறப்போல! தெரியுமா?

பீம்: அடசே, இதுக்கெல்லாம் பயந்தா நடக்குமா? என்னிக்கிருந்தாலும், ஒரு நாள் இந்த உசிரு போகத்தான் போகுது, இது நிச்சயம். அப்படி இருக்க அது இந்த மாதிரி காரியத்துக்காக போகட்டுமே. நாலுபேருக்கு நல்லதை சேஞ்சி, உசிரை விட்டான்னு பேர் இருக்கட்டுமே, மனுசனா பொறந்தா சுயமரியாதையும், பகுத்தறிவும், பிறர் நலங்கருதி உதவி புரியறதுமா இருக்க வேண்டாமா? அப்படி இல்லாதவன் அவன் மனுசனா வாழவே யோக்கியதை இல்லாதவனாவான். நாம்ப என்னா இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி மக்களை கெடுக்கவா பார்க்கிறோம்? ஒரு நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு ஒரு இன சமுதாயத்திற்கு நடந்த தொல்லைகள் சொல்லி, உங்களுக்கும் இதுமாதிரி வராம சாக்கிரதையா இருந்துக்குங்கோ என்று தானே சொல்லப்போறோம். இதிலே இரகசியமோ, சூழ்ச்சியோ, கலவரமோ, பலாத்காரமோ ஏதாகிலும் இருக்குதா? அப்படி இருந்தாத்தானே நமக்கு கெடுதி? அதுசரி, இனிமே நீ என்னா பண்ணப்போறே?

தங்: பண்ணப் போறேன் சட்டியும், பானையும்! இவருதான் ரொம்ப கருணையுள்ள சீர் திருத்த தேசபக்தியிலே மிகுந்தவராக்கும்! இதோ பாருங்க......(தன் வீட்டினுள் சென்று 15 பெண்களுடன் கருப்பு புடவை—அணிந்து கொண்டு சிகப்பு சட்டையை அணிந்து கொண்டும் வந்து பீம்சிங்கை வணங்குகின்றனர். அப்போது பீம்ஸிங்கின் நண்பர்களும் பீம்ஸிங்கிடம் வருகிறார்கள். எல்லோரும் ஒருவரையொருவர் "வணக்கம்" என சொல்லி கரங்கூப்பி வணங்கிக் கொள்ளுகின்றனர்.)

பீம்: அடடே, தங்கம், நீ பலே கை காரிதான். உன் குணமும் தங்கம், உன் சாமர்த்தியமும் தங்கம், உன் சேவையும் தங்கம், இப்போ நீ என்னை முந்திகிட்டியே!

தங்: இப்போ என்ன? இனி எப்போதுந்தான், ஆம்பிளைதான் ரொம்ப அறிவுள்ளவங்கன்னு உங்களை போல சில ஆசாமிங்க நினைக்கிற நினைப்பை இனி விட்டுடுங்க..........ஆமாம்!

பீம்: அப்படின்னா இதோ, இப்போதே ஒத்துக்குறேன். அதுவும் என்னுடைய தோழர்கள் முன்னாலேயே, பொம்பளைங்க இனி யாருக்கும் தாழ்ந்தவங்க இல்லே.............இல்லே. இல்லே...இப்போ சந்தோஷம் தானே? (சந்தோஷத்துடன் கேட்கிறான்)

தங்: அதுதான் சரி (சிரித்துக்கொண்டே)

பீம்: ஆஹா............என்னுடைய வாழ்விலேயே இதுதான் முதல்தடவை நான் சந்தோஷமா இருக்கிறது. இப்படியே நாம் ஒத்துமையாம இருந்து இந்த ஓண்ட வந்த கூட்டத்துக்கு, ஒடியாந்த கூட்டத்துக்கு, ஆண்டவன் பேரை சொல்லி மக்களை ஆட்டிப் படைக்கிற கூட்டத்துக்கு என்னேரமும் பணம், பணம் என்று பிடுங்கி தின்னும் கூட்டத்திற்கு சரியான பாடம் கற்பிப்போம்!

வருணாசிரமம் —ஒழிக.
மதப் புரட்டு —ஒழிக.
ஜாதி முறை —ஒழிக.
பெண்ணடிமை —ஒழிக.
இனப் பற்று —ஓங்குக.
மொழிப் பற்று —ஓங்குக.
நாட்டுப் பற்று —ஓங்குக.

(எல்லோரும் முழங்குகின்றனர்)

(திரை விழுதல்)

முற்றிற்று.


## திராவிடத் தோழர்களே!

**நீங்கள் போர்வாளின் சந்தாதாரர் ஆகிவிட்டீர்களா?**

போர்வாளின் வளர்ச்சி திராவிடர் இயக்கத்தின் வளர்ச்சி; திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி; பகுத்தறிவு எண்ணங்களின் வளர்ச்சி. எனவே போர்வாள் சந்தாதாரர் ஆவது உங்கள் கடமை அல்லவா?

ஓராண்டு சந்தா ரூ. 6 8 0 — 6 மாத சந்தா ரூ. 3 4 0

**போர்வாள் அலுவலகம்**

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

# ஆரிய இனத்தவரின் ஏகபோக மிராசு

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

48-49 பி. எஸ்ஸி

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 49·5 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 34·2 |

49-50 பி. எஸ்ஸி

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 46 6 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 38·3 |

48-49 பி ஏ. (ஆனர்ஸ்)

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 46·5 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 32·9 |

48-49 பி. எஸ்ஸி (ஆனர்ஸ்)

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 55 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 24·3 |

49-50 பி.ஏ.ஆனர்சும், பி.எஸ்ஸி ஆனர்சும்.

பர்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 48·5 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 31·4 |

மெடிகல் கல்லூரி (1947)

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 24·4 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 45·8 |

இஞ்சினீரிங் கல்லூரி (1947)

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 25 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 49·4 |

இஞ்சினீரிங் கல்லூரி 1949

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 20·5 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 35·4 |

1950

பார்ப்பனர்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 3 |
| கிடைத்திருப்பது | 20 |

அல்லாதார்

| | |
|---|---|
| கிடைக்கவேண்டியது | 67·4 |
| கிடைத்திருப்பது | 58 |

சென்னையில் உள்ள கல்லூரிகளில் எந்தெந்த வகுப்பு மாணவர்கள் எத்தனை எத்தனைபேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதற்கானபுள்ளி விவரம்.

## 1948—49-ல் சேர்க்கப் பட்டோர்

| | இண்டர் | பி. ஏ. பாஸ் | பி. எஸ்ஸி | பி. ஏ. ஆனர்ஸ் | பி. எஸ்ஸி ஆனர்ஸ் |
|---|---|---|---|---|---|
| **1. கிறித்தவக் கல்லூரி** | | | | | |
| பார்ப்பனர் | 88 | 15 | 45 | 29 | 8 |
| அல்லாதார் | 87 | 38 | 48 | 25 | 5 |
| **2. பச்சையப்பன் கல்லூரி** | | | | | |
| பார்ப்பனர் | 172 | 41 | 69 | 28 | — |
| அல்லாதார் | 828 | 192 | 190 | 42 | — |
| **3. லயோலா கல்லூரி** | | | | | |
| பார்ப்பனர் | 201 | 105 | 71 | 38 | 5 |
| அல்லாதார் | 174 | 74 | 28 | 14 | 2 |

[எல்லா வகுப்புகளிலும், இக் கல்லூரியில் பார்ப்பனரல்லாதாரைவிட பார்ப்பனரே அதிகம் இருப்பதைக் கவனிக்கவும்.]

| | இண்டர் | பி. ஏ. பாஸ் | பி. எஸ்ஸி | பி. ஏ. ஆனர்ஸ் | பி. எஸ்ஸி ஆனர்ஸ் |
|---|---|---|---|---|---|
| **4. விவேகாநந்தா கல்லூரி** | | | | | |
| பார்ப்பனர் | 268 | 111 | — | 48 | 3 |
| அல்லாதார் | 30 | 8 | — | 1 | — |

[பார்ப்பன இனத்தவரால் நடத்தப்படும் இந்தக் கல்லூரி, அசல் அக்ரகாரமாக இருப்பதையும், பார்ப்பனரல்லாத மாணவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவே சேர்க்கப்பட்டிருப்பதையும் கவனிக்கவும்]

5. பிரசிடென்சி கல்லூரி

| | பி. ஏ. | பி. எஸ்ஸி |
|---|---|---|
| பார்ப்பனர் | 16 | 108 |
| அல்லாதார் | 38 | 112 |

# மனுதர்ம காலமல்ல இது! மக்களாட்சிக் காலம்!

மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், 100-க்கு 2.7 அல்லது 3 ஜனத்தொகையுள்ள பார்ப்பன இனம், 1948—49-ல் ஆண்டில்,

| | |
|---|---|
| இன்டர் மிடியட்டில் | 33.2 |
| பி. ஏ, பி. காமில் | 27.8 |
| பி. எஸ்ஸியில் | 49.5 |
| பி. ஏ. ஆனர்ஸில் | 46.5 |
| பி. எஸ்ஸி ஆனர்ஸில் | 55 |

என்ற சதவிகிதத்திலும், 1949-50-ம் ஆண்டில்,

| | |
|---|---|
| இன்டர் | 33.8 |
| பி. ஏ, பி. காம் | 38.6 |
| பி. எஸ்ஸி | 46.6 |
| பி. எஸ்ஸி ஆனர்ஸ் } பி. ஏ. ஆனர்ஸ், } | 48.5 |

என்ற சத விகிதத்திலும், எஞ்சினீரிங் கல்லூரியில், 1947-ல் 25 சதவிகிதம், 1949-ல் 20 சதவிகிதம், 1950-ல் 20 சதவிகிதம் என்ற முறையிலும், மருத்துவக் கல்லூரியில், 24.4 சதவிகிதத்திலும் இடம் பெற்றுள்ளனர் என்னும் உண்மை நன்கு புலனாகும்.

"செய்யும் புரளி—இருக்கும் உண்மை" என்ற தலைப்பின் கீழ், இவ்வளவு புள்ளி விவரங்களையும் வெளியிட்டுவிட்டு காங்கிரஸ் ஏடு "தினசரி" சற்று காரமாகவே கேட்கிறது,

"பிராமணர் என்பதற்காக பிராமண இளைஞர்களுக்குப் படிக்கக் கூட வசதி மறுக்கப்படுகிறது என்று கூக்குரல் போடுகிறார்கள் அல்லவா? இக் கூக்குரல் நியாயம் என்பதற்கு ஏதாவது உண்மை உண்டா? இதுவரையில் கொடுக்கப் பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப் பார்க்கிறவர்கள் யாராவது பிராமணருக்கு வசதி மறுக்கப் படுகிறது என்று யோக்கியமாகச் சொல்ல முடியுமா?"

முடியாது, தினசரியாரே, நிச்சயமாக முடியாது. நேர்மைப் பண்புள்ளவர்கள், நீதி நெறி உணர்ந்தவர்கள், உண்மைக்குக் கட்டுப்பட்டவர்கள், ஊரும் நாடும் உன்னதமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள் ஆகிய யாராலுமே அப்படிப் பொய்யுரைக்க முடியாது. ஆனால் முடிகிறது பார்ப்பன இனத்தாரால் அப்படி மனந் துணிந்து மகத்தான பொய்யுரை புகல!

எவ்வளவு தைரியம் இருந்தால், எவ்வளவு நெஞ்சு உரம் இருந்தால், எவ்வளவு ஆணவம் இருந்தால், இந்த நாட்டுப் பெருங்குடி மக்களைப்பற்றி எவ்வளவு இழிவான எண்ணம் இருந்தால், 100-க்கு 3 மக்கள் தொகையுள்ள ஒரு சிறு கூட்டம் 100-க்கு 20, 30, 40, 50, 60 என்ற விதத்திலே, அளவுக்கு மீறிய இடங்களைப் பெற்றுக் கொண்டு, அதே நேரத்தில் தங்களுக்குக் கல்லூரிகளில் இடம் மறுக்கப்படுகிறது என்று பேசவும் செய்வார்கள்! எவ்வளவு விபரீதமான போக்கு இது!

100-க்கு 30-ம் 40-ம் 50-ம் பெறுகிற இன்றைய நிலையில் கூட திருப்தியுறாமல் இன்னமும் தங்கட்கு அதிக இடம் வேண்டும் என்று ஓங்காரக்குரல் எழுப்புகிறதே அந்த ஒய்யாரக் கூட்டம், என்ன பொருள் இதற்கு? என்னதான் எண்ணுகிறது அந்த இனம்? ஒவ்வொரு கல்லூரியிலும் "பிராமணளுக்கு மட்டும்" என்ற பலகையைத் தொங்கவிடவேண்டும் என்று ஆசைப்படுகிறதா அந்தச் சிறு கும்பல்? பிராமணரல்லாத பிள்ளைகள் ஒருவர் கூட கல்லூரிகளில் நுழையக் கூடாது என்ற கருத்தா? கல்வி நிலையங்கள் அத்தனையும் வெறும் அக்கிரகாரங்களாக இருக்க வேண்டும் என்ற ஆசையா? தங்கள் இனத்தவர்கள் மட்டும்தான் டாக்டர்களாக, இஞ்சினீயர்களாக, வழக்கறிஞர்களாக, பேராசிரியர்களாக, நீதிபதிகளாக, கலெக்டர்களாக, மந்திரிமார்களாக, கவர்னர்களாக வரவேண்டும்—பார்ப்பனரல்லாத இனத்தவர்கள் கட்டை வெட்டிகளாகவும் ரிக்ஷா இழுப்பவர்களாகவும் மாடு மேய்ப்பவர்களாகவும் கூலி வேலை செய்பவர்களாகவுமே என்றென்றும் இருக்க வேண்டும் என்ற குள்ளநரி நினைப்பா? பேராசைப் பித்தம் என்றாலும், அதற்கும் ஓர் எல்லை, ஒழுங்கு முறை, வரைபறை கிடையாதா? இது என்ன மனுதர்ம காலமா, படிக்கும உரிமை எங்கள் இனத்திற்குத்தான் உண்டு—பிற இனத்தவர்களுக்கு அடிமைகளாக இருக்கத்தான் உரிமை உண்டு—அதுதான் ஆண்டவன் அன்று பிறப்பித்த கட்டளை என்று பேசி ஏய்க்க?

பார்ப்பன இனத்தவரே, வேண்டாம் இந்த விபரீதப் போக்கு! வேண்டாம் இந்த நச்சு நினைப்பு! வேண்டாம், வேண்டாம் இந்த முறைதவறான நடத்தை! பார்ப்பனரல்லாத இனத்தவரை வலியச் சென்று வம்பு செய்து போருக்கு அழைக்கும் இந்தப் பொல்லாங்கு வேண்டாம்! பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துகொண்டு வருகிறது, அதை மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வந்து நிறுத்தும் இந்த எண்ணமும்

(9-ம் பக்கம் பார்க்க)

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

**அகதிகளை,** நிருபர் கண்டு குறைகளைத் திரட்டித் தந்திருக்கிறார். அவர்களில் சிலரின் எலும்புருவங்களைப் புகைப்படமாக்கி, ஆளவந்தார்களின் பார்வைக்குக் கொணர்ந்திருக்கிறார். ஆளவந்தார்கள் கண்திறக்கவேண்டும் ஆபத்து அதிகமாகும் முன்! அது கட்டுக்கடங்காத பேருரு எடுக்குமுன், பரிகாரம் தேடியாகவேண்டும், பொறுப்பான பதவியில் இருக்கும் புண்ணியவான்கள்.

தமிழ் நாட்டின் பெரும் பகுதியில், பஞ்சப் பேய் தலை விரித்தாடுகிறது. பச்சிளம் குழந்தையானாலும், பருவமடைந்த பாலியானாலும், மூத்த முதியவரானாலும், பஞ்சப்பேய் ஒருவரிடத்திலும் பச்சாதாபம் காட்டப் போவதில்லை.

பீகாரிலே பட்டினிச் சாவு என்று அங்குள்ள காங்கிரஸ் மந்திரியிலே ஒருவர் கூறுகிறார். அதனை மறுக்கிறார் முன்ஷிஜி. தற்கொலையா, பிறர் அடித்துத் தூக்கிலிட்டு விட்டார்களா, நஞ்சுண்ட மரணமா என்று கண்டுபிடிப்பதற்காக பிணப் பரிசோதனை செய்வதுபோல, பீகார் மரணத்தை, அலசி அலசி பரிசோதனை நடத்திக் காட்டுகிறார் முன்ஷிஜி.

இத்துணைக் கண்டத்தில் உணவுத் தட்டில்லை என்பது துவக்கத்தில்! பட்டினியால் சாக ஒருவரையும் விடமாட்டேன் பது இரண்டாம் கட்டத்தில். செத்தவர்களைக்கூறினால், வேறு காரணங் காட்டி நிலைமையை மறைப்பது மூன்றாம் நிலையில். உணவுப் பொருள் கொள்முதலும் விநியோகமும் ஒழுங்காக இல்லைஎன்பது நான்காம் பட்சத்தில். பஞ்சமோ பல்லாயிரக் கணக்கான மக்களை பலிகொள்ளும் பயங்கர நேரத்தில், பொது மக்கள் ஒத்துழைக்கவில்லை எம்முடன் என்று பொதுமக்கள் மீது பழியைப் போட்டுவிட்டு, பகவத் சேவையிலும், கோசம்ரட்சணையிலும் கருத்தைச் செலுத்தி காலங்கழிப்பது முடிவில் இதுதான் அமைச்சர் முன்ஷிஜியின் அற்புதப் போக்காக இருந்து வருகிறது!

‘‘முன்ஷிஜி, நிலை மோசமாகிறது. அரிசி இத்தாலியிலிருக்கிறது. பர்மா, சயாம், இந்தோசீனா போன்ற இடங்களிலே இருக்கிறது. என்ன விலை கொடுத்தேனும் இங்கு இறக்குமதி செய்தாக வேண்டும்.’’ என்று அவருக்கு நாம் அன்புடன், தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம். பஞ்சத்தால் பல லட்சம் மக்கள் செத்தாலும் கவலையில்லை, நம் நாட்டுப் பணம் வெளி நாடுகளுக்குப் போகாமல் இருந்தால் போதும் என்று எண்ணுவது முக்கியமா? அல்லது பலர் உழைப்பை ஈடுசெய்து அதிகவிலை கொடுத்தேனும் வெளி நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து, இந் நாட்டு மக்களை சாகவிடாமல் காப்பது முக்கியமா? இதில் எது முக்கியம்? கடுகளவு மனிதாபிமானம் இருப்பவர்களும், வசதி இருந்தும், லட்சக் கணக்கானவர்களைப் பட்டினிப் போட்டுக் கொல்வதை முறையென்று கூறமாட்டார்களே.

‘கொள் முதலும் விநியோகமும் ஒழுங்காக நடைபெறவில்லை’ என்று முன்ஷிஜி முகாரி பாடுகிறார். அந்தப் பணியை வேறுயாரோ செய்து வருவது போலவும், அத்துறையில் பணிபுரிவோரை வேறு எவரோ கண்காணிப்பது போலவும், அவர்களைத் தட்டிக் கொடுத்தோ அதட்டிப் பேசியோ வேலை வாங்கும் பொறுப்பு பிறரிடம் இருப்பது போலவும், பொருள் படும்படியாக முன்ஷிஜி பேசுகிறாரே, அதற்கென்ன காரணம்? அவர் உணவு மந்திரி அல்லவா? கொள்முதலும் விநியோகமும் நன்கு நடைபெறவில்லை என்றால், அந்த ஊழலுக்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவர் உணவு மந்திரியாக உள்ள முன்ஷிஜிதானே? இவருக்கு முன்பிருந்தவரும் இவ்வாறு தானே பேசிவந்தார்? ‘அவர் திறமையற்றவர்; ஆனால் ஆற்றல் மிக்கோன்நான்; அளவரிசி திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவேன்; இன்னுமோர் ஆண்டில் இத்துணைக் கண்டம் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்யும் நாடெனப் பேரெடுக்கப் பார்த்துக்கொள்வேன்; பதவியில் என்னை அமர்த்திப் பாருங்கள் பண்டிதரே! பட்டேல்ஜியே!’’ என்று கூறி பதவிபெற்ற முன்ஷிஜி தனது நிர்வாகத்தில் உள்ள இலாக்காவையே பழிக்கப் புறப்பட்டிருப்பது, பொது ஜன நீதிமன்றத்தில், குற்றவாளி கூண்டில், தன்னை அறியாமலே, தன்னை ஓர் குற்றவாளியாகக் கொண்டு வந்து நிறுத்துவதாகவே ஆகும்.

நல்ல உயிர் நாற்பது நாளைக்கு என்பார்கள். ஒருவேளை பட்டினி இருப்பதாலேயே ஒருவருக்கும் உயிர் பொடுக்கென்று போய்விடாது. பல நாள் பட்டினி கிடந்தால்தான், தினம் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளுறுப்புகள் எல்லாம் தம்மியல்பில் கோளாறு அடைந்து, இலகுவில் திருத்தம் பெற முடியாத அளவில் சீரழிந்து, முடிவில் மரணமடையும். இடையிடையே பட்டினிக்கிடந்து கிடந்து உள்ளுறுப்புகளின் கோளாறால் ஒருவன் உயிர் துறந்துவிட்டால், துணைக் காரணமாக வேண்டுமானால் அக் கோளாற்றின் அடியாகப் பிறந்த நோயைக் கொள்ள

# புன்முறுவல் பூத்த முகத்துடனே புறப்படுக போர்க்களம்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

செயலும் வேண்டாம் அந்தப் பிரச்சினை முன்னணிக்கு வந்துவிட்டால், பிறகு நஷ்டம் உங்களுக்குத்தான்—நிச்சயமாக உங்களுக்குத்தான்! இப்போதுள்ள விழிப்புணர்ச்சி நிலையில், ஒவ்வொரு திராவிடனும் ஓர் சேரன் செங்குட்டுவனாக விளங்கும் இன்றைய நிலையில், பார்ப்பனர்-அல்லாதார் பிரச்சினை மூண்டுவிட்டால், பிறகு, “100-க்கு 3 உள்ள வகுப்புக்கு கல்லூரிகளில் 100-க்கு 20-ம் 30-ம் என்ற விதத்தில் இடம் ஏன்? 100-க்கு 3 இடம் கொடு—அது போதும், அது தானே நியாயம்!” என்று பேசத் தொடங்கி விடுவான் திராவிடன். “உத்தியோக மண்டலமா, ஆட்சிப் பீடமா, அமைச்சர் அவையா, சட்டசபையா, எனவாய் இருந்தால் என்ன, 100-க்கு 3 ஜனத்தொகை உள்ள அந்தக் கூட்டத்திற்கு 100-க்கு 3-க்கு மேல் ஓர் இடமும் தரக்கூடாது-தரமுடியாது-தரவிட மாட்டோம்” என்று வீரமுழக்கம் செய்யத் தொடங்கிவிடுவான். அந்த முழக்கத்தை நடைமுறை நிலைமையாக்க எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்கவும் தயாராகி விடுவான்! பிறகு அதை உங்களால் தடுக்க முடியாது—உங்களால் என்ன, யாராலும் தடுக்க முடியாது. உங்களுடைய நல்வாழ்வுக்கு நீங்களே படுகுழி வெட்டிக் கொள்ளாதீர்கள்! உங்களுடைய நிலைமையை நீங்களே கீழுக்குத் தள்ளிவிடாதீர்கள்!

பார்ப்பனரல்லாதாரே! திராவிட இனத்தவரே! இந்த நாட்டின் சொந்தக்காரர்களே! சேர சோழ பாண்டியர்தம் வழிவழி வந்த வீர மரபினரே! உங்களுக்கு ஒரு வார்த்தை! கம்யூனல் ஜி. ஓ. இருக்கும்போதே உங்களுக்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய இடங்கள் கிடைக்கவில்லை! இதோ சென்னை உயர்நீதி மன்றம் கல்வித் துறையில் அந்த ஜி. ஓ. செல்லாது என்று தீர்ப்பளித்து விட்டது. இனி உங்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது அருமையினும் அருமை. தகுதி என்றும், திறமை என்றும், மார்க் என்றும், மற்றும் அது இது என்றும் என்னென்னவோ சொத்தை வாதங்களை எழுப்பிக் கொண்டு ஒரு சிறு கூட்டம் கல்லூரிகளில் ஏகபோக மிராசு செலுத்தத் தொடங்கிவிடும்! ஓர் ஐந்து ஆண்டுகாலம் இந்த நிலை நீடிக்குமானால், பிறகு, உத்தியோக மண்டலம் முழுவதும் ஆரியபுரியாக உருமாறிவிடும். அதன் பிறகு, நீங்கள், உங்கள் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள், உங்கள் சந்ததி, அனைவருமே கட்டை வெட்டும் கந்தன்களாகவும் மாடு மேய்க்கும் முருகன்களாகவும் வீடுகூட்டும் வீராயிகளாகவும்தான் இருக்கமுடியும். இதிலே ஐயம் துளியும் வேண்டாம். நிச்சயமாக இந்த இழிநிலை உங்கட்கு ஏற்பட்டே தீரும் இந்த ஜி ஓ. மட்டும் இல்லாமல் போய்விட்டால்.

எனவே, பார்ப்பனரல்லாத தோழர்களே, இந்த ஜி. ஓ. மீண்டும் சட்டப்படி செல்லும் என்னும் நிலைமையை எப்படியேனும் உண்டாக்குங்கள்.

அதற்காக ஆயிரம் ஆபத்துகளுக்கு உள்ளாகவேண்டும் என்றாலும் சரி, புன்முறுவல் பூத்த முகத்துடனே, ஆபத்துகளை ஏற்க ஆயத்தமாகுங்கள்!

தயாராகுங்கள், தீரர்களே தயாராகுங்கள், இந்தப் பிரச்சினையில் வெற்றி பெறுவதற்காக எத்தகைய தியாகத் தீயிலும் குதித்தெழத் தயாராகுங்கள்.

இந்த அறப்போரில் நாம் மடிந்தாலும், நம் பிள்ளைகள் மடிந்தாலும், நம் பிற்கால சந்ததியினராவது, எதிர்கால திராவிட சமுதாயமாவது, சகல உரிமைகளுடனும் தலை நிமிர்ந்து வாழட்டும். அவர்கள் வாழ, நாம் பலியாவோம். எதிர்காலத் திராவிடம் இன்பத் திராவிடமாக, நாம் துன்பங்கள் ஆயிரமாயிரம் வரினும் ஏற்போம்.

நாம் மூவேந்தரை முன்னோராகக் கொண்ட முத்தமிழர் கூட்டம், நாடாண்ட பரம்பரை! மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு, ஆடு மாடு மேய்த்துக்

(18-ம் பக்கம் பார்க்க)

---

லாமே யன்றி, முதற்காரணமாக அதனை எந்த மருத்தவரும் கூறத் துணியார். முதற்காரணம் சத்தற்ற ஆகாரம், வேண்டிய அளவு இல்லாத குறை—இன்றுள்ள அவலட்சணமான பங்கீடு.

வங்கமும் தமிழ் நாடும் அரிசியை அடிப்படை உணவாகக் கொண்டிருப்பது. அவர்கள் தேவை கோதுமை அல்ல. புழுத்த கோதுமையை இங்கு அனுப்புவதையும், மேலும் இறக்குமதி செய்வதையும் நிறுத்திக்கொண்டு, அரிசி இறக்குமதி செய்து தமிழர்—திராவிடர்களின் அல்லல் களைய உடனடியாக முயலுமையா உணவு மந்திரியாரே—ஆரிய குலதிலகமே! பிறகு வேண்டுமானால் சோமநாதபுர ஆலயத் திருப்பணியை ஆரம்புயும். கோபிகை கொஞ்சும் ரமணனுக்கு கோவில் கட்டி, கும்பாபிஷேகம் செய்து, அதனை பாரத்தின் தேசிய விழாவாக்குங்கள், யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை முன்ஷிஜி.

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1981 ஆடி 21
5—8—50 சனிக்கிழமை

# வேல் பாய்ந்த வேழம்!

**"ஆட்சியாளர்களால் நடத்தப்படும் அல்லது ஆட்சியாளர்களின் உதவி பெற்று நடத்தப்படும் எந்தக் கல்வி நிலையத்திலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவுப்படி மாணவர்களைச் சேர்ப்பது சட்டப்படி தவறு; அந்த முறை, புதிய இந்திய அரசியல் திட்டத்திற்கு மாறானது—எனவே செல்லாது"**

என்று, சென்னை உயர்நீதி மன்றம், தீர்ப்பு அளித்த நாள் 27-7-50 வியாழக்கிழமை,

இன்று, தேதி, 5-8-50 சனிக்கிழமை.

இடையே இருப்பன ஏறத்தாழ பத்து நாட்கள்.

இந்தப் பத்து நாட்களாக திராவிடக் குடும்பம் ஒவ்வொன்றும் ஒரு சோக சித்திரமாகவே காட்சி அளிக்கிறது. ஆனால் ஆரியத் தோழர்களின் இல்லங்களோ இன்பபுரிப் பயணம் செய்தபடி இருக்கின்றன.

திராவிடர் முகங்களிலே வேதனையின் தாண்டவம். ஆரியர் முகங்களிலோ, பெருங் களிப்பின் நர்த்தனம்.

நம்மவர் கண்களிலே, சோகத்தின் சாயல். அவர்களுடைய நயனங்களிலோ ஆநந்தத்தின் பிரதிபிம்பம்.

நம்மவர் சொற்களிலே, அந்தோ என் செய்வோம் என்ற ஏக்கம்—ஏமாற்றம். அவர்களுடைய உரையாடலிலோ, "அடைந்தோம் வெற்றி—இனி, நமதே ராஜ்யம்" என்ற பூரிப்பு—புன் முறுவல்.

நம்மவர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது, பிண ஊர்வலத்திலே, ஒருவரைஒருவர் காண்பதுபோன்ற மோனநிலைமை. சாஸ்திரம் தாங்கிகள், ஒருவரைஒருவர் பார்க்கும்போது, திருமண விழாவிலே, மணமகன் மணமகளையும் மணமகள் மணமகனையும் ஓரக்கண்ணால் கண்டு ஓயாத இன்பம் பெறுவது போன்ற மோகன நிலைமை.

பாலைவனம் இங்கே! பூந்தோட்டம் அங்கே!

எட்டிக்காய் இங்கே! கட்டிக் கரும்பு அங்கே!

வாடைக்காற்று இங்கே—இன்பத் தென்றல் அங்கே!

கொளுத்தும் வெய்யில் இங்கே! அணைக்கும் நிலவு அங்கே!

பற்பல நாட்களாகப் பட்டினி கிடப்பவன் போன்ற நிலை நமக்கு! எதிரே, தலைவாழை இலையில், அறுசுவை உணவும் குவித்துவைக்கப் பட்டிருப்பது போன்ற நிலை அவர்கட்கு!

சென்ற பத்து நாட்களாக, இன்பத் திராவிடம், துன்பக் கேணியாகத்தான் மாறி இருக்கிறது. இதை நாம் மறைக்கத் தேவையில்லை. மறைப்பதால் பயன் ஏதுமில்லை.

ஏற்பட்டுள்ள நிலைமை, வெட்கரமானது; வேதனை தரக்கூடியது; உள்ளத்தை சோக வெள்ளமாக ஆக்கக்கூடியது. இதுதான் உண்மை. இந்த உண்மையை நாம் மறுக்கமுடியாது. மறுப்பதால் நன்மை விளையவும் முடியாது.

ஆரியம், களித்துக் குதித்துக் கூத்தாடத்தான் செய்கிறது! திராவிடம் ஏங்கிப் புலம்பித் தவிக்கத்தான் செய்கிறது! சீறிப் போரிடும் பண்புபடைத்த சிங்க ஏறுகள் சில துளி கண்ணீர் சிந்தியபடிதான் இருக்கின்றன. பயந்து பதுங்கி ஒண்டி ஒதுங்கி வாழும் சிறுநரிக் கூட்டம், சிந்தையெலாம் மகிழ்ந்து சிந்துகள் பல பாடியபடிதான் உள்ளது.

வேதனை மிகுந்ததோர் விசித்திரம்தான் இது. ஆனால், இதை மறைப்பதாலோ, மறுக்க முயல்வதாலோ, மறப்பதுபோல பாவனை புரிவதாலோ, அல்லது இதன் பயங்கர விளைவுகளைச் சிறுமைப்படுத்திப் பேசுவதாலோ, அல்லது தட்டிக் கழித்துவிட்டு நமக்கென்ன இதைப்பற்றி என்று இருப்பதாலோ, திராவிட இனத்துக்கு நன்மை சிறிதும் விளையாது.

**அறிஞர் அண்ணாதுரை** அவர்கள், சென்றவாரம் அழகுபட எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, "**திராவிட சமுதாயத்திற்கு அதன் ஆதிநாள் தலைவர்கள் அரும்பாடுபட்டுப் பெற்றுத்தந்த கருவூலம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.**" அந்தக் கருவூலம் இப்போது பறிபோய் விட்டது.

பரம ஏழைக்குக் கிடைத்த ஒரு பண முடிப்பைப்போல, தள்ளாடி நடக்கும் முதியவருக்குக் கிடைத்த ஓர் ஊன்றுகோல் போல, கண்விழி இரண்டும் அற்றவனுக்குக் கிடைத்த ஓர் ஒப்பற்ற வழிநடைத் துணைவன்போல, கடும்பசி கொண்டவனுக்குக் கிடைத்த இன்ப உணவுபோல, தீராத நோயாளிக்குக் கிடைத்த அற்புத மருந்துபோல, நமக்கு—திராவிடருக்கு—பற்பல நூற்றாண்டுகளாக மத மதோன்மத்தர்களால் அடக்கி ஒடுக்கி வஞ்சிக்கப்பட்டு வாழும் இந்த நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு—இன்பம் இழந்து, வாழ்வு இழந்து, உரிமை இழந்து, ஆட்சியையும் இழந்து, ஆத்மீகத் துறையிலேயும் ஆரிய அடிமைகளாகக் கிடந்து நலிந்த பழம் பெரும் சமுதாயத்துக்குக் கிடைத்த பொக்கிஷம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அந்த உரிமை இனி நமக்குக் கிடையாது என்பதை சென்னை உயர் நீதி மன்றம் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிவிட்டது.

கம்யூனல் ஜி.ஓ. என்று அழைக்கப்படும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையைத் தவறான திட்டம் என்று கூறவில்லை உயர் நீதி மன்றம்.

அந்த முறை, நம் சமுதாயத்தின் முற்போக்குக்கும் வளர்ச்சிக்கும் தேவையில்லை என்றும் புகலவில்லை.

அந்த முறை நாட்டில் இருப்பது

# "நம்மளவா இராஜ்யந்தான் இனி! நோக்குத் தெரியுமன்னோ!"

அநீதி—அக்கிரமம்-அநாவழி என்றும் விளம்பவில்லை.

அந்த முறை சட்டப்படி செல்லாது என்றுமட்டும்தான் கூறுகிறது.

நியாயப்படி செல்லாது என்று கூட இயம்பவில்லை. சட்டப்படி செல்லாது என்று மட்டும்தான் இயம்புகிறது.

கம்யூனல் ஜி. ஓ. தேவையா இல்லையா—அது அல்ல நாங்கள் ஆராயும் பிரச்சினை' அது இருப்பதால் நாட்டுக்கு நன்மையா, இல்லாமல் இருப்பதால் நன்மையா—அதையுமல்ல நாங்கள் தீர்ப்புக் கூறவேண்டியது. அந்த உத்தரவு புதிய அரசியல் திட்டப்படி செல்லுமா செல்லாதா என்பதுமட்டும்தான் எங்களால் முடிவு கட்டப்படவேண்டிய பிரச்சினை என்பதை நீதிபதிகள் விளக்கமாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

பிரச்சினையை விசாரித்துத் தீர்ப்பளித்த மூன்று நீதிபதிகளிலே ஒருவர்—**ஜஸ்டிஸ் விஸ்வநாத சாஸ்திரி**, இந்த ஜி. ஓ. எடுபட்டுவிட்டால், பார்ப்பன இனத்துக்கு விசேஷ லாபம் உண்டு என்பதைக் குறிப்பாக ஒப்புக்கொண்டும் இருக்கிறார்.

"இந்த ஜி. ஓ. இல்லாமல் போவதால், ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது வகுப்பைச் சேர்ந்த சிலருக்கு தனிப்பெரும்பயன் ஏற்படக் கூடும்" என்று, அவர், தம்முடைய தீர்ப்புரையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

அதுபோலவே, கம்யூனல் ஜி. ஓ. சட்ட விரோதம் என்று வாதாடிய வழக்கறிஞர் **வி. வி. சீனிவாச அய்யங்காரும்**,

"கம்யூனல் ஜி. ஓ. மகத்தான வரலாற்றுக் காரணங்களின் விளைவாக ஏற்பட்ட உத்தரவாக இருக்கலாம். பிறப்பினாலேயே தாங்கள் பிராமணர்களாகிவிட்டதாக ஒரு வகுப்பினர் சொல்லிக்கொள்வதைக்கண்டு ஹிந்துசமுதாயத்தில் உள்ள ஏனையோர் அனைவருக்கும் கொஞ்சம் மன எரிச்சல் இருக்கலாம். இந்தப் புதிய அரசியல் திட்டம் உருவாவதற்கு முன்னால், அந்த ஜி. ஓ. வுக்கு அவசியம் இருந்திருக்கலாம். அதையெல்லாம் நான் அலட்சியப்படுத்தவில்லை. ஆனால், புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பிறகுகூட கம்யூனல் ஜி. ஓ. வுக்கு அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவசியம் இருக்கிறதோ இல்லையோ, அந்த ஜி. ஓ. புது அரசியல் திட்டத்திற்கு மாறுபட்டது என்பதை மட்டும்தான் நான் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்."

என்று குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல. "**கம்யூனல் ஜி. ஓ. இல்லாமல் போவதால், பிராமணரல்லாத வகுப்புகளுக்குக் கொஞ்ச காலத்திற்குக் கொஞ்சம் கஷ்டம் ஏற்படக்கூடும் ஆனால் சில ஆண்டுகளுக்குள், அப்படி இல்லாமல் போவது அவர்களுக்கும். நன்மையாகவே முடியும்.**" என்று கூட அவர் விளக்கம் உரைத்திருக்கிறார். ('ஹிந்து' 20-7-50 இதழ். பக்கம் 7. பத்தி 5),

ஆம்! கம்யூனல் ஜி. ஓ. இல்லாமல் போவதால், பிராமணரல்லாத வகுப்புகளுக்குக் கேடுவிளையும் என்பதை நீதிபதிகளோ, அல்லது ஜி ஓ வை எதிர்த்து வாதாடிய வழக்கறிஞர்களோ யாரும் மறுக்கவில்லை. நீதிபதிகள் முடிவாகவும் திட்டமாகவும் கூறியிருப்பதெல்லாம், கம்யூனல் ஜி. ஓ. புதிய அரசியல் திட்டத்திற்கு முரண்பட்டது, எனவே அந்தத் திட்டப்படி செல்லாது என்பதுதான்.

நீதிபதிகள் தங்கள் கடமையைச் செய்திருக்கின்றனர் — சட்டப்படி தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர்—சட்டப்படி தீர்ப்பு வழங்கத்தான் அவர்கள் நீதிபதிகளாக இருக்கின்றனர். சட்டம் தவறானதாக இருந்தாலும், சட்டத்தால் அநீதியே விளைவதாக இருந்தாலும், சட்டப்படிதான் நீதிபதிகள் தீர்ப்பை உரைத்தாகவேண்டும்—சட்டமே தவறாக இருக்கிறது என்பதை எடுத்துக்கூறும் உரிமை அவர்களுக்குக் கிடையாது.

எனவே, கம்யூனல் ஜி. ஓ. இன்று செல்லுபடியாகாமல் ஒதுக்கப்பட்டு, அதனால் திராவிட இனத்தவர்தம் கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள பேரிடிக்குப் பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள் நீதிபதிகள் அல்லர். இந்திய அரசியல் திட்டத்தைத் தீட்டிய பாரத புத்திரர்கள் தான்.

அரசியல் திட்டம் தீட்டப்பட்ட டில்லி அரசியல் அமைப்பு மன்றத்தில் உறுப்பினர்களாக அமர்ந்து அந்தத் திட்டத்தை, நிறைவேற்றி வைத்தவர்கள் பொது வுடமைக் கட்சியினரல்ல; திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்கள் அல்ல; திராவிடக் கழக நண்பர்கள் அல்ல; சமதர்மக் கட்சியின் உறுப்பினர்களுமல்ல. அவர்கள் அனைவரும் தேசபக்த சிங்கங்கள். அல்லது அவர்களுடைய ஆசியையும் அன்பையும் ஆதரவையும்பெற்று அவர்களுடைய இருதயகீதங்களாக விளங்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் போன்றவர்கள் ஆகும்.

இந்திய அரசியல் திட்டம், தென்னிந்தியாவை, வட இந்தியாவுடன் இணைத்துப் பிணைத்துவைக்கும் அடிமைச் சங்கிலி ஆகும். இந்தச் சங்கிலி திராவிடனின் கைகளையும் கால்களையும் பிணித்திருக்கும் காரணத்தால், அவனுடைய அரசியல் சமூக வாழ்க்கையில் அவனுக்கு ஏற்பட்டுவரும் இடையூறுகள் ஏராளம். அந்த எண்ணற்ற இடையூறுகளில் ஒன்றுதான், கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கம்யூனல் ஜி. ஓ. செல்லாது என்று ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமை.

இன்றையதினம், ஆரியம், புன்முறுவல் பூத்த முகத்துடனே, வெற்றி விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஆரியத் தோழர் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும், மகிழ்ச்சி, துள்ளிக் குதித்து பரத நாட்டியம் ஆடியபடி இருக்கிறது. ஒழிந்தது தப்பா கம்யூனல் ஜி. ஓ. தீர்ந்தது பா நம் கலி! இனி [illegible] நமக்கு! பயமில்லை பயமில்லை என்று ஆரிய வட்டாரம் களிப்புச் சிந்து பாடியபடி இருக்கிறது. கேட்டயளோ விஷயத்தை! ஜி. ஓ. சமாப்தியாயிடுத்து! நம்மளவா ராஜ்யந்தான் இனி! தெரியுமன்னோ! என்று பார்ப்பன உலகு பேரானந்தத்துடன் பேசியபடி இருக்கிறது. வீதிவழி[illegible] திராவிட இளைஞர்களைக் காணும் போது, "சூனா மானாவாம்! முன்னேற்றக் கழகமாம்! குதிச்சிண்டிருந்ததுகள்! இதுகள் இப்போ தலை குனிஞ்சிண்டு போறதுகள்!

# திடீர் வெற்றியல்ல! நெடுங்கால சூழ்ச்சியின் விளைவு!

இதுகளாவது இனி காலேஜ் வாசலை எட்டிப் பாக்கறதாவது!" என்று தேவமொழியிலே வார்த்தைகளை வீசிக்கொண்டிருக்கின்றனர் வேதமோதிகள். இந்தப் பஞ்சாங்கப் பட்டாளத்தின் பூரிப்பு இன்று கட்டுக் கடங்கவில்லை.

ஆம்! அவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர்! உண்மையிலேயே வெற்றி பெற்றிருக்கின்றனர். நாம்-திராவிடர்கள்—தோல்வி பெற்றிருக்கிறோம். அதுவும் மானக்கேடான தோல்வி பெற்றிருக்கிறோம்.

ஆனால் பார்ப்பன வகுப்பினர் இன்று பெற்றுள்ள வெற்றி திடீரென்று அவர்களைத் தேடிவந்த வெற்றி அல்ல. எதிர்பாராவண்ணம் அவர்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டப் பரிசும் அல்ல! இந்த வெற்றியைப் பெறுவதற்காக பாபம், அவர்கள் பட்டபாடு எவ்வளவு! செய்த முயற்சிகள் எத்தனை! யார் யாரைக் கண்டு, என்னென்ன சூழ்ச்சிகள் செய்திருக்கிறார்கள்! எத்தனை எத்தனை முறைகளைக் கையாண்டு, என்னென்ன பொய்யுரைகளைப் புகன்று, எப்படி எப்படியெல்லாம் கூக்குரல் எழுப்பி, எத்தனை பிராமண மாநாடுகளில் தீர்மானங்களைப் போட்டு, எவ்வளவு கைவலிக்க வலிக்கப் பத்திரிகைகளில் எழுதி, எத்தனை எத்தனை மந்திரிகளைப் பேட்டி கண்டு, என்னென்ன கஜகர்ணம் போட்டிருக்கிறார்கள்! ஹிந்துவும் மித்திரனும், தினமணியும் தேவியும், கல்கியும் சுவதந்த்ராவும் எத்தனை ஆயிரம் முறை பார்ப்பனருக்கு இழைக்கப்படும் இந்த மாபெரும் "அநீதி" (!) யைப்பற்றி காரசாரமாகவும் வேக வேகமாகவும் தீப்பொறி பறக்கும் நடையில் தலையங்கங்கள் தீட்டியிருக்கின்றன! சட்டசபையிலே எத்தனை முறை வரதாச்சாரிகளும் வைத்தியநாதய்யர்களும் இதற்காக வரிந்துகட்டிக்கொண்டு பேசியிருக்கிறார்கள்! எவ்வளவு உரத்த குரலில் ருக்மணி லட்சுமிபதிகள் இந்த ஜி. ஓ வை எதிர்த்து 'வீர முழக்கம்' புரிந்திருக்கிறார்கள்! உத்தமர் ஓமந்தூராரையும், அன்பர் அவினாசியாரையும், ஆரிய வட்டாரம், அமைச்சர் பீடத்திலிருந்து அகற்றியதற்குக் காரணமே, அவர்கள், இந்தத் துறையிலே உறுதிபடைத்த உள்ளத்தினராக இருந்தனர் என்பதுதானே! சட்ட மன்றத்திலேயும் கிழமை ஏடுகளிலேயும் ஓய்வு ஒழிவு என்பதின்றி கனம் கோபாலனார்மீது கடுங்கோபத்தைப் பொழிந்து கொண்டிருந்ததே ஆரியம், அதற்குரிய காரணமும், அன்னார், வகுப்புவாரி உத்தரவை வன்மையாக ஆதரித்தார் என்பதுதானே! தங்கள் செல்லப்பிள்ளை என்று ஆசையுடன் போற்றிவந்த அன்பர் பக்தவச்சலனார்மீதும் திடீரென்று ஆரியம் இரண்டு திங்களுக்கு முன்னர் பிரசார பீரங்கியைத் திருப்பியதற்குக் காரணமும் இது வல்லவா!

இன்றா நேற்றா, வகுப்புவாரி உத்தரவு எந்தக்காலத்தில் பிறப்பிக்கப்பட்டதோ, அந்தக் காலம் முதலே, ஆரியம், அரும்பாடுபட்டு வந்தது அந்த உத்தரவை ஒழித்துக் கட்ட! ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னால், **தோழர் எஸ். முத்தையா முதலியார் அவர்கள்** சென்னை மாகாண அமைச்சராக இருந்தபோது, அவரால் பிறப்பிக்கப்பட்டது இந்த உத்தரவு. அப்போதே இதை எதிர்த்து பார்ப்பன வகுப்பினரால் எழுப்பப்பட்ட எதிர்ப்புக் கிளர்ச்சி, பின்னால், பொப்பிலி அரசர் மந்திரி சபை இருந்தபோதும், பின்னர் சர் கே. வி. ரெட்டி அமைச்சர் அவை இருந்தபோதும், அதற்குப் பின்னால் ஆச்சாரியார் அமைச்சர் அவை அமைத்தபோதும், அதற்கும் பின்னர் அட்வைசர்கள் ஆட்சி நிகழ்ந்தபோதும், பிறகு பிரகாசம் காருவின் மந்திரிசபை இருந்தபோதும், அந்த ஓடம் கவிழ்ந்து ஓமந்தூரார் கப்பல் பயணம் செய்தபோதும், அது சூழ்ச்சிக் குண்டுகள் வீசி மூழ்கடிக்கப்பட்டு குமாரசாமியார் கோட்டை எழுப்பப்பட்ட காலத்திலும், தொடர்ந்து இருந்துகொண்டே வந்தது. அந்த எதிர்ப்புக் கிளர்ச்சி, சில சமயங்களில், சீறிடும் சிங்கமென வெளிப்படையாக எழுந்தது; வேறு சில சமயங்களில் அரவம்போல் அமைதியாக வந்து கடு விஷத்தைக் கக்கிவிட்டுச் சென்றது. சில நேரங்களில் நேருக்கு நேர் நின்று பார்ப்பனரல்லாத வகுப்புடன் போராடிப் பார்த்தது; வேறு சில நேரங்களில் பயந்தும் பதுங்கியும், மறைந்தும் மாறுவேஷம் பூண்டும் எதிர்த்துப் பார்த்தது. சில வேளைகளில் தேசியப் போர்வையில் மறைந்துகொண்டு தன் தாக்குதலை நடத்திற்று—வேறு சில வேளைகளில் பச்சை வைதீகக் கோலத்துடனேயே பணிதனைப் புரிந்தது. இங்ஙனம், எதிர்ப்பின் முறையும் வகையும், அளவும் அமைப்பும், தீவிரமும் தன்மையும், அவ்வப்போதிருந்த சூழ்நிலைக்கு ஏற்றவண்ணம் மாறி மாறி அமைந்தனவே தவிர, திராவிட சமுதாயத்திற்குக் கிடைத்த இந்தக் கேடயத்தை, கருவூலத்தை, அதனிடமிருந்து தட்டிப் பறித்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான முயற்சியை மட்டும் அந்த ஆதிக்க வகுப்பினர் என்றுமே செய்யாமல் இருந்ததில்லை.

"தினசரி!"—அனைவருக்கும் தெரியும், அது சூனாமானா ஏடல்ல! சூனா மானாக்களைத் தாக்கித் தாங்கி உரம்பெற்ற காங்கிரஸ் ஏடு—அது எழுதியிருக்கிறது தன்னுடைய 30-7-50 இதழில்:—

"சென்னை சர்க்கார் பிறப்பித்திருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவு, பிராமணர்களுக்கு, மேல் படிப்புக்கு வேண்டிய வசதியே இல்லாதபடி செய்துவிட்டது என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. கண்டவிடங்களிலெல்லாம் இதையே பெரும் புகாராகவும் சொல்லி வருகிறார்கள். சட்டசபைகளிலும், இந்தியாவில் மற்ற பகுதிகளிலும் இதைக் குறித்து பிரமாதமாக பிரசாரம் செய்தும் வருகிறார்கள். இந்திய பார்லிமெண்டிலும், டில்லியிலும், சென்னை சர்க்காரின் உத்தரவைக் கண்டித்து அடிக்கடி காரசாரமாகப் பேசியும் வருகிறார்கள். தென்னிந்தியாவிலிருந்து யாராவது டில்லிக்குப் போனால், பிராமணருக்கு இம்மாகாணத்தில் படிக்கக்கூட வசதி மறுக்கப்பட்டிருக்கிறதா என்று பலர் கேட்கிறார்கள். உலகத்தின் மற்ற பகுதிகளில் சில சமூகத்தினர் அக்கிரமமாக நடத்தப்படுவதுபோலவே தென்னிந்தியாவில் பிராமணர்களும் நடத்தப்படுகிறார்கள்

(2-ம் பக்கம் பார்க்க)

ஓ. எம். சுப்பிரமணியன்



# காங்கிரஸ் அமைச்சர்களே—எங்கே உங்கள் பதில்?

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, இங்கே அண்டிப் பிழைக்கவந்த நாடோடிக் கும்பல் அல்ல!

இமயத்தில் புலிக்கொடி நாட்டிய திருமாவளவன், கனக விசயரை கல்சுமக்கச் செய்த செங்குட்டுவன், கங்கைப் பிரதேசத்தில் காவிரியின் புகழ்நாட்டிய இராசேந்திரன், ஈழத்தில் தமிழ்க்கொடி நாட்டிய பராந்தகன்—இவர்கள் நம் மூதாதையர்கள்! மாவீரன் வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன் அல்ல, இலக்குவனல்ல.

போர் போர் போர் என்று முரசு கொட்டி முழுவெற்றி பெற்ற வீரர்தம் வரலாற்றை விளக்கும் **கலிங்கத்துப் பரணி** நம்முடைய இலக்கியம். சூழ்ச்சியாலும் சூதுமார்க்கத்தாலும் தான் பிழைக்கவேண்டும் என்பதை எழில்பட இயம்பும் மனுதர்ம சாஸ்திரமல்ல.

வஞ்சகம் நாம் அறியாதது. சூது நமக்குத் தெரியாதது. சூழ்ச்சி, நமக்குத் தேவையில்லாதது. நாம் அறிந்த ஓரே பாதை, சிறந்த பாதை, சீரிய பாதை,—வீரமார்க்கம்! அந்த மார்க்கம் ஒன்றுதான் நமக்குத் தெரியும். அந்த ஒரு மார்க்கம் போதும் நமக்கு! வீர பரம்பரையினருக்கு வீர மார்க்கத்தைத் தவிர வேறு மார்க்கம் எப்படி இருக்க முடியும்? ஏன் இருக்கவேண்டும்?

இந்த ஜி. ஓ—நமது மூலாதார முழக்கம்; நமக்கு வாழ்வளிக்கும் கருவூலம்; சமுதாய அநீதியை வெட்டி வீழ்த்த நாம் பெற்றுள்ள போர்வாள். இதை நாம் இழக்கக்கூடாது. எவ்வளவு ஆபத்து வரினும் சரி, இழக்கக்கூடாது.

அன்புள்ள சென்னை காங்கிரஸ் அமைச்சர்களே! நீங்கள் இதுவரை இந்த ஜி. ஒ வை முற்றமுடிய ஆதரித்திருக்கிறீர்கள். இதைப் பாராட்டிப் பல முறை பேசியிருக்கிறீர்கள். வீழ்ந்துகிடக்கும் திராவிட சமுதாயத்திற்கு உயர்வுதரும் கருவி இதுதான் என்று சட்டசபையிலே எத்தனையோ முறை உரத்த குரலில் முழக்கமிட்டிருக்கிறீர்கள். இப்போது உங்களுக்கு, உங்கள் நாணயத்திற்கு, உங்கள் நேர்மைக்குச் சோதனைக் காலம் பிறந்திருக்கிறது. இதுவரை நீங்கள் ஜி. ஒ. வை ஆதரித்துப் பேசியது அவ்வளவும் வெறும் சந்தர்ப்பவாதமா அல்லது மனம் திறந்து கூறிய வாசகமா என்பதை நாடு தெரிந்துகொள்வதற்கான தக்கதோர் தருணம் பிறந்திருக்கிறது. நீங்கள் இதுவரை இந்த ஜி. ஒ. வை ஆதரித்துப் பேசியதெல்லாம் காணபமான சொற்களாய் இருந்தால், இந்த ஜி. ஒ. வை மீண்டும் நிலைநாட்டுவதற்கான பணி புரிய உடனே முன்வாருங்கள்.

1. சென்னை உயர்நீதி மன்றத்தீர்ப்பை ஆட்சேபித்து டில்லி சுப்ரீம் கோர்ட்டுக்கு உடனே மனுச் செய்யவேண்டும்.

2. அந்த வழக்கு மன்றத்திலும், கம்யூனல் ஜி. ஒ, இந்திய அரசியல் திட்டத்திற்கு மாறுபட்டதுதான் என்று தீர்ப்பு கிடைத்துவிட்டால், பிறகு, இந்த ஜி. ஒ. வுக்கு உடன்படும் முறையில் அரசியல் திட்டத்தின் குறிப்பிட்ட பகுதியை மாற்றி அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடத்திற்கும், டில்லி பாராளுமன்றத்திற்கும் தெரிவித்துவிடவேண்டும்.

3. அப்படி அவர்கள், "தென்னாட்டு நிலையைப்பற்றி எங்கட்குக் கவலையில்லை. நாங்கள் அரசியல் திட்டத்தை தென்னாட்டவர் நன்மைக்காக மாற்ற மாட்டோம்." என்று தெரிவித்துவிட்டால், உடனே அந்தப் போக்கை எதிர்த்து சென்னை மந்திரி சபையில் உள்ள அனைவரும் ஆட்சிப் பீடத்தை விட்டு, வெளியேறி விடவேண்டும்.

இதுதான் சென்னை அமைச்சர்கள் உடனடியாகச் சென்று தீரவேண்டிய பாதை.

இந்தப் பாதை வழியாக, அமைச்சர்களே, செல்ல மனமும் துணிவும் இருக்கிறதா இல்லையா? அன்புகூர்ந்து அதனை விரைவில் தெரிவித்து விடுங்கள். உங்களால் ஜி. ஒ. வை நிலைநாட்ட முடியாதென்றால், நாடு, அந்தப் பணி புரிய தயாராக இருக்கிறது.

'ஜி. ஒ. வை மறுக்கும் அரசியல் திட்டம்' என்னும் வேல் பாய்ந்த வேழமாக இருக்கிறது திராவிடம் இன்று. அதன் வேதனைக் குரல் அதோ கேட்கிறது. அந்த வேலினைப் பறித்து எறிந்து, அந்த வேழத்திற்கு ஆறுதல் காட்டவேண்டியதும், இனி இத்தகைய கொடுமைக்கு ஆளாகா வண்ணம் அந்த வேழத்திற்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியதும் உங்கள் கடமை.

உங்கள் கடமையைச் செய்ய நீங்கள் தயார்தானா? அமைச்சர்களே, எங்கே உங்கள்விடை? எப்போது தெரிவிக்கப் போகிறீர்கள்?

அவசரமான பிரச்சினை இது எனவே இதில் ஆமை வேகத்தில் செயலாற்றினால் தேவையான பயன் விளையாது. எனவே உங்கள் விடை உடனடியாகக் கிடைத்தாக வேண்டும்—சொற்கள் என்னும் வடிவில் அல்ல, செயல் என்னும் உருவில்!

---

# கம்யூனல் ஜி. ஓ. வைக் காப்பாற்றியே தீருவோம்!

★

## வகுப்புநீதி கிடைக்கும்வரை ஓயமாட்டோம்!

### திரண்டனர் திராவிடர்—இட்டனர் இடிமுழக்கம்!

### மக்கட் கடலிடையே தலைவர்கள் வீரஉரை.

★

"நான் ஒரு படத்தில், 'சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கை ஏழைகளால் பெற முடியவில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது, சென்னை உயர்நீதி மன்றம் கம்யூனல் ஜி ஓ, சட்டப்படி செல்லாது என்று தீர்ப்பளித்திருப்பதைக் கண்டதும் எனக்கு அந்த வாசகம்தான் கவனத்துக்கு வருகிறது. யாரோ இரண்டு பார்ப்பன மாணவர்கள்—அவர்கள் யார், என்ன நிலையில் இருப்பவர்கள் என்பதே யாருக்கும் தெரியாது—அவ்வளவு சாதாரணமான நிலையில் இருப்பவர்கள்தான் அவாகள். ஆனாலும் அவர்களால் தங்கள் சாரபில் வாதாட அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வி. வி சீனிவாச அய்யங்கார் போன்ற பிரபலமான வழக்கறிஞர்களைப் பெறமுடிகிறது. ஆனால் ஏழைத்திராவிட மாணவர்களால் அது முடியக்கூடிய செயலா? ஆகவே தான் நான் கூறுகிறேன், சட்டம் கம்யூனல் ஜி. ஓ வுக்கு பாதமனதாக இருந்தால் அதற்காக ஜி. ஓ. வைத் தள்ளிவிட வேண்டாம்—ஜி. ஓ. வுக்கு இணங்கும் விதத்தில் சட்டத்தை மாற்றி அமையுங்கள் என்று! மக்கள் வாழ்வதற்காகத்தான் சட்டம் இருக்கிறதே தவிர சட்டம் வாழ்வதற்காக மக்கள் இல்லை."

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் **அறிஞர் அண்ணாதுரை** அவர்கள், 2-8-50 புதன்கிழமை மாலை, சென்னை ராபின்சன் பார்க் மைதானத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் வீரமுழக்கம் புரிந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு, மக்கள் 50,000-க்கு மேல் கடல்போல் திரண்டு குழுமியிருந்தனர். மைதானம் முழுவதும் திராவிட வீரர்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்தனர். கம்யூனல் ஜி. ஓ. இருந்தே தீரவேண்டும் என்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வமும் திடசித்தமும் அவர்கள் அன்று அங்கு எழுப்பிய இடியோசை முழக்கங்களிலிருந்து மிகத் தெளிவாக விளங்கின.

"இந்த ஜி. ஓவைக் காப்பாற்றுவதற்காக அறப்போர் தொடங்கப்படுமானால், உங்களில் எத்தனை பேர் சிறைக்கோட்டம் புகவும் தியாகத் தழும்புகள் ஏற்கவும் தயார்?" என்று அண்ணா அவர்கள் கேட்டபோது, கூடியிருந்த கூட்டத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் தவிர ஏனையோர் அனைவரும் கை உயர்த்தி "தயார், தயார்" என்று வீரமொழி விளம்பிய காட்சி, ஆரிய ஆணவத்தை முறித்துத்தள்ளும் மாட்சி அமைந்ததாக இருந்தது.

முதற்கண் முன்னாள் அமைச்சர் **தோழர் எஸ். முத்தையா** கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, வந்திருக்கும் பேராபத்தைத் தடுத்து ஒழிப்பதற்காக திராவிட சமுதாயம் சாதி மத கட்சி வேறுபாடின்றி திரண்டெழுந்து போராடியாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய **பாரிஸ்டர் ரங்கராமானுஜம்**, ஆரிய இனத்தவர்கள் அடிக்கடி எழுப்பிவரும் தகுதி—திறமை வாதத்தைத் தவிடு பொடியாக்கினார். "இந்த நாட்டிலே பார்ப்பன மாணவர்கள் எப்படி எப்படி யெல்லாம் மார்க்குகள் வாங்குகிறார்கள் என்பது யாருக்குத் தெரியாது? ஆசிரியர்கள், பெரிதும் "அவர்களாக" இருக்கும்போது 'மார்க்' அவர்களுக்குக் கிடைப்பதிலே ஆச்சரியமேது?" என்று கேட்டுவிட்டு, தமிழாசிரியர்களில் பலர் கால் மார்க், அரைக் கால் மார்க், என்று அளந்து போடும் கஞ்சத்தனத்தையும் விளக்கியபோது தகுதிதிறமைவாதம் தூள் தூளாகிச் சிதறுண்டு மண்ணிலே விழுந்து மறைந்ததென்றே கூற வேண்டும்.

இறுதியில், **அண்ணா அவர்கள்** விரிவாகவும் விளக்கமாகவும், இந்த ஜி. ஓ. வால் திராவிட சமுதாயத்திற்கு ஏற்பட்டு வந்த நன்மைகளையும் இது இல்லாமல் போவதால் விளையக்கூடிய மகத்தான நஷ்டத்தையும், மறைந்து வரும் பார்ப்பனர்—அல்லாதார் பிரச்னையை மீண்டும் கைபிடித்து இழுத்துவந்து மக்கள் மன்றத்தில் நிறுத்தியது எவ்வளவு பெருந்தவறு என்பதை பார்ப்பன சமுதாயம் உணர்ந்து திருந்தும் நாள் அதிக தொலைவில் இல்லை என்பதையும் இந்த ஜி. ஓ. வைக் காப்பாற்றுவதற்காக அறப்போர் தொடங்கப்படும் நிலை ஏற்பட்டால், அப்போது ஏற்படக் கூடிய சகலவிதமான அடக்குமுறைகளுக்கும் மக்கள் தயாராக இருந்தாக வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டினார்.

# முன்ஷிக்குக் காணிக்கை!

"காமரேட்"

ஆரிய குலதிலகம், விக்ரமாதித்தியன்வாரிசு, இத் துணைக்கண்டத்துக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்க 'ஆண்டவ'னால் அனுப்பப்பட்டுள்ள 'தேவதூதர்', காஞ்சியில் அவர் கால் வைத்ததும் சிறு தூரல் ஏற்பட்டதுகண்டு சீடகோடிகளால் மனம்மகிழ்ந்து கூறப்பட்ட ரிஷ்யசிருங்கர், கனம் பக்தவத்சலத்தால் சிறப்பிக்கப்பட்ட பிர்மா, வடமொழிக்கு வாழ்வளிக்க வந்த வள்ளல் பெருமான், காட்டுவிழாவின் சிருஷ்டி கர்த்தா, ஆரிய கலாசாரத்திற்குப் புத்துயிர் அளிக்கவந்த பெருந்தகை — இவ்வளவு திருக்கல்யாண குணங்களைக் கொண்டவர், இந்தியத் துணைக்கண்டத்தின் உணவு மந்திரியாக இன்று இருக்கும் கனம் கே. எம். முன்ஷிஜி. அவருடைய ஆட்சியில ஒவ்வொருவரும் பிரஜையாக இருப்பதற்கு நாம் என்னென்ன பேறு செய்திருக்கிறோமோ தெரியவில்லை!

அவர் சில தினங்களுக்கு முன் பம்பாய் நகரில் கூட்டமொன்றில் பேசும்பொழுது — '**இந்தியாவில் பட்டினியால் சாக ஒருவரையும் இந்திய சர்க்கார் கைவிட்டுவிடாது**' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

பஞ்சம், கோரத்தாண்டவம் புரிகிறது நாட்டில். 'பட்டினியால் ஒருவரையும் சாகவிடமாட்டோம்' என்று சாமர்த்தியம் பேசுகிறார் உணவு மந்திரி முன்ஷிஜி!

இத்துணைக் கண்டம், தனது உணவுத் தேவைகளுக்கு, வெளிநாட்டையே பெரிதும் நம்பி வாழ்ந்துகொண்டு வந்திருக்கிறது இதுவரையில். இந்த நாட்டில் பயிர் செய்யக்கூடிய, பண்படுத்தப்படாத, தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. மனித சக்தியும் ஏராளமாக இருக்கின்றது. இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு உணவுப் பற்றுக்குறையைப் போக்க ஊராளவந்தவர்களுக்குத்தான் உருப்படியான திட்டமில்லை—நடைமுறைக்குக் கொண்டுவரும் நினைப்புமில்லை—நாட்டுமக்கள் நல்வாழ்வில் அக்கறையுமில்லை

உணவுப் பற்றுக்குறையைப் போக்க உபதேசிக்கிறார்கள்—வெளிநாட்டில் இருந்து விவசாய விற்பன்னர்களை வரவழைத்து விவாதிக்கிறார்கள் — விதவிதமான விளம்பரங்களையும் விளக்கங்களையும் வெளியிடுகிறார்கள்-இவைகளுக்காக இலட்சக் கணக்கில் வரிப்பணத்தை வாரி இரைக்கிறார்கள் — உருவான பலன் பூஜ்யம்!

விமானத்திலே பறந்து செல்லுகிறார் விவசாய மந்திரி—உயரப் பாய்ந்து போகிறார் உணவு மந்திரி — ஊர்ஊராகச் சுற்றித்திரிகிறார் உணவு நிபுணர் — என்றெல்லாம் பத்திரிகைகளில் பத்திப்பத்தியாகச் செய்திகள் தினம் தினம் வருகின்றன. ஊராள வந்தவர்களின் பல ரகப் புகைப்படங்களுக்கும் பஞ்சம் இருப்பதில்லை. இவைகளால் நம்பிக்கை ஏற்படுகிறது மக்களுக்கு. இருந்தாலும் அவர்களை நாசம் சூழ்ந்து கொண்டு இருக்கிறது.

ஒருநாள் உணவை ஒழியுங்கள் என்ற வேண்டுகோள்—கந்தமூலங்களை, காய்ந்த சருகுகளை, கீரை கிழங்கு வகைகளை சாப்பிட்டு சாந்தி பெறுங்கள் என்ற கருத்துரை—சாமாரியாகப் பொழியப்படுகிறது தினசரி, முன்ஷிஜியால்! இதற்காகவே தாம் அமைச்சராக அமர்த்தப்பட்டிருக்கிறோம் என்ற அர்த்தமற்ற நினைப்பால்!

உணவுப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதை மறந்து, பருவ மழை இல்லாமல் பாலைவனமாகப்போயிருக்கிற நாட்டில், பத்து ஆண்டுகளுக்குப் பின்னால் நல்ல பலன் தரும் என்று பசப்பி, பச்சிளம் செடிகளை, பட்டுப்போகுமா பக்குவமாக வளருமா என்பதை சிறிதும் கருதாமல், செடி நடும் திருவிழாவைக் கொண்டாடுவதும், 'கணபதி'யை நினைத்துக் குட்டிக்கொண்டு, குமரனை நம்பிக் கன்னத்தில் போட்டுக்கொண்டு, சிவனை எண்ணி கவி பாடிக்கொண்டு, திருமாலை நினைத்துத் தோத்தரித்துக்கொண்டு, துளசிச் செடி நட்டுத் துதிபாடிக்கொண்டு காலங்கழித்து வருவதும், கடமை தெரிந்தவர்களின் நற்கருமம் ஆகாது — நாட்டுக்கு வந்துள்ள கேட்டையும் அது போக்காது — குறைக்கவும் குறைக்காது.

உணவுப்பொருள் தட்டு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நாளுக்குநாள் இந்த அபாய அறிவிப்பு கூடுகிறது—எண்ணிக்கையில் மட்டுமல்ல—ஒலிப்பதில்கூட.

இதுபற்றி 'ஏன் இந்த நிலை

இருக்கிறது? ஆபத்து வேகமாக வருகிறதே, அலட்சியமாக இருக்கிறீரே, அடுக்குமா ஆளவந்தாரே இது? தகுமா தர்மவானே? தர்மம் தெரிந்தவரே சாற்றுமையா சாற்றும்' என்று எவராவது கேட்டால், கேளாக்காதராக இருப்பது ஒரு சமயம், கேட்டும் மௌனம் சாதிப்பது மற்றோர் சமயம், முறைத்துப் பார்ப்பது இன்னோர் சமயம், முணுமுணுப்பது வேறோர் சமயம், பொய்யான புள்ளி விவரங்களைக் கொட்டி நெருக்கடியான நிலைமையைத் தட்டிக் கழிப்பது இறுதியில்

நாட்டின் நலத்திலே அக்கறையுடையவர்கள், மக்களின் நல்வாழ்விலே நோக்கம் கொண்டவர்கள், எஞ்சிய மனிதப் பண்பையும் இழக்காதிருப்பவர்கள், உணவுப் பொருள் முட்டால், மக்கள் படும் அவதியை ஆணித்தரமாக எழுத்தாலும் சொல்லாலும் எடுத்துக் காட்டினால், 'பட்டினியால் ஒருவரையும் சாகவிடமாட்டேன்' என்று சாகசம் பேசியும், பஞ்சத்தால் செத்தவனைக் காட்டினால், 'அவன் கழிச்சலால் செத்தான்—காய்ச்சலால் மாண்டான்—குடல் கோளாறால் மடிந்தான்' என்று சமாதானம் கூறுவதும், உணவு மந்திரி முன்ஷிஜியின் நித்தியக் கடமைகளில் ஒன்றாக இருந்துவருகிறது.

'வாந்திபேதியும் அல்ல. விஷஜுரமும் அல்ல — வயிற்றுப் பிணியுமல்ல — அவன் இறந்ததற்குக் காரணம்' என்று வாதம் கிளம்பினால், 'அவன் வயோதிகன், எனவே மாண்டான்' என்று வம்பு பேசுகிறார், இத்துணைக் கண்டத்து மக்களுக்கு உணவளித்துக் காக்க வந்த உணவு மந்திரி முன்ஷிஜி!

நாட்டின் உண்மையான உணவு நிலையை, அமைதியான முறையில் அளவிட்டுக் காட்டினால், 'அழுகுரல் எழுப்பாதீர்—நெருக்கடி என்று வெளிப்படுத்தாதீர்—அதனால் ஆபத்து வரும் — உணவுப் பொருளின் விலை ஏறிவிடும்—உள்ள உணவுப் பொருளும் பாதளத்திற்குக் குடிபோய்விடும்' என்று பதைபதைத்துக் கூறுகிறார் முன்ஷிஜி!

இருக்கும் நிலையை உணர்ந்துகொண்டு, தாமாக முன்வந்து, நெருக்கடியை நீக்கும் குணம், பொதுவாகக் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கும் குறிப்பாக முன்ஷிஜிக்கும் அறவே கிடையாது. சொல்புத்தியோ இவர்களுக்குக் கொடு நஞ்சு. மனுமகஜர்களையோ இவர்கள் மதிப்பதில்லை. பத்திரிகைகள் கூறுவதையும் கேட்பதில்லை. பேட்டிகளுக்கும் இவர்கள் அனுமதிப்பதில்லை. எப்படித்தான் இவர்களுக்கு உண்மையை உணர்த்துவது? மக்கள் தேவைகளை இவர்களுக்கு அறிவிப்பது?

முன்ஷிஜியின் ஊர் சுற்றல், தீர்த்தயாத்திரை வகையைச் சேர்ந்தது. தேவாலயங்களை தரிசிப்பது—புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது—மக்களை மறந்து—ஆனால் தங்கள் சுகத்தை மட்டும் மறவாத—மாயாவாதம் பேசும் மாமிச பிண்டங்களின் பாதங்களில் பணிந்து நல்லாசி பெறுவது — போகும் இடங்களில் எல்லாம் ஆரிய மதக் காலட்சேபம் செய்வது—தலைநகர் திரும்புவது! இதுதான் உணவு மந்திரி முன்ஷிஜியின் கடமை—பொறுப்பு — நாம் கண்டுவருகிற காட்சி!

பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோர், பட்டினியால் தாக்குண்டோர், தேவைகளால் நிரம்பப் பெற்றோர், பொதுக்கூட்டங்கள் போட்டு அமைதியான முறையில், தங்கள் குறைபாடுகளை மாகாண மந்திரிகளுக்கும், அவர்கள் மூலமாக தொலைவிலுள்ள டெல்லிக்கும் அறிவிக்கலாம் என்றாலோ, 'கூட்டமா போட எண்ணுகிறீர் — குறைகளை வெளியில் கூறவா கிளம்புகிறீர்—மந்திரிகளைத் தாக்கவா முனைகிறீர், நீங்கள் வீணர்கள்—விஷமிகள்— பலாத்காரவாதிகள்—அரசைக் கவிழ்க்க முயற்சிக்கும் சதிகாரர்கள்—சண்டாளர்கள், உங்களைக் கூட்டம் போடவிடோம் — குறைகளைக் கூற அனுமதியோம்—இதோ துருப்பிடித்துப்போன 144 சட்டம்! துன்மார்க்கர்களே, உங்கள் தோல்வாய் அடையட்டும்!' என்று மாகாண மந்திரிகள், பொதுமக்கள்வாக்குக்குப் படல் சாத்தி மூடிவிடுகிறார்கள்; சிறந்ததோர் ஜனநாயகப் பாதையை அடைத்துவிடுகிறார்கள்.

சங்கராச்சாரியின் ஜலதோஷம், அகோபில மட ஆச்சாரியாரின் அஜீரணம், அம்மணசாமியின் அற்புதம், அத்திவரதரின் அருள்திறம், திருப்பதியாரின் திருவாபரணப் பெருமை, வேதங்களின் அனாதித் தன்மை, வால்மீகியின் விவேகம், கீதாசரியரின் ஞான ஒளி, போன்ற விஷயங்களை எழுதி அலுத்துப்போன நேரத்தில், அட்லிக்கு ஆலோசனை, ட்ரூமெனுக்கு அறிவுரை, ஸ்டாலினுக்கு அச்சுறுத்தல், சியாங்-கே-ஷேக்குக்கு அனுதாபம் என்ற முறையில் எழுத்துப் பணிபுரிகின்றன 'நமது' பத்திரிகைகள். இதுவே, அவைகளின் பாரம்பரைப் பண்பு!

சென்னை மாகாணத்தில், அதிலும் தமிழ் நாட்டில், அரிசி — கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற தானியங்களே முக்கியமான உணவுப் பொருட்களா

கும். கடந்த மூன்று ஆண்டுகளாகவேகாலாகாலத்தில் மழை கிடையாது. இரண்டொரு ஜில்லாக்கள் தவிர்த்து மற்ற ஜில்லாக்கள் அனைத்திலும் வயல்கள் வெடித்துக்கிடக்கின்றன. நஞ்செய் புஞ்செய் பயிர்கள் எதுவுமே குறிப்பிடத் தகுந்த அளவில் பலன் தரவில்லை. நிலத்தையே நம்பி வாழும் உழவர்கள் நிலை பயங்கரமானதாக இருக்கிறது. அவர்கள் குடும்பம் சீரழிந்து போய் கிடக்கிறது. வேறு வேலை செய்து பிழைக்கலாம் என்பதற்கோ நாட்டிலே அதற்கான வகை எதுவும் தற்சமயம் இல்லை. அவர்கள் நிலை மிகமிக மோசம், அவர்கள் ஏதோ வேலைசெய்து, 'ஒரு பருக்கையும் ஒரு குவளை நீரும்' என்ற முறையில் அரைக்கால் வயிறு கால் வயிறு என்று கஞ்சி குடித்துக்கொண்டு, ஜீவனைக் காப்பாற்றிக் கொண்டுவருவது, சுலபத்தில் விடை காணமுடியாத ஒரு பெரும் புதிர்தான்.

காசு கொடுத்தால் அரிசி கிடைக்கும், துட்டு கொடுத்தால் கேழ்வரகோ சோளமோ கிடைக்கும், என்ற நம்பிக்கையும் அவர்களை விட்டுத் தொலைந்துபோய் சில வாரங்கள் ஆகிவிட்டன. பங்கீட்டுக்கடைகளிலும் சரி வேறு இடங்களிலும் சரி உணவு தானியங்களை அவர்கள் கண்ணால் காண்பது என்பதே, நடுப்பகலில் நட்சத்திரத்தைப் பார்ப்பதுபோல் நிலைமை ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பீடித்திருக்கிற இந்தத் துர்ப்பாக்கியநிலையை எடுத்துக்கூறுவது நாம் மட்டும் அல்ல. நமது மாகாண அமைச்சர்கள்கூட போகும் இடங்களிலெல்லாம் ஈனக்குரலிலே இதனைத்தான் பேசுகிறார்கள். அதற்காக உள்ள அதிகாரிகளும் இதையே பேசுகிறார்கள். கிராமப் பகுதிகளில்தான் என்பதில்லாமல் சென்னை போன்ற நகரப் பகுதிகளிலும், சில நாட்களாகவே, ஒவ்வொரு நிமிஷமும், ஒருவரை ஒருவர் காணும் பொழுது, 'உங்கள் ரேஷன் கடை திறந்திருக்கிறதா? அரிசி கொடுக்கிறார்களா?' என்ற கேள்வியைத்தான் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

இந்த அவல நிலையை ஆளவந்தார்களுக்கு அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறுவதில் சென்னை ஆங்கில தினசரியான 'மெயில்' பத்திரிகை முன்னணியில் இருக்கிறது. மக்களுக்கு உணவளித்துக் காக்க வகையற்ற மந்திரிகள் பதவியைவிட்டு ஏன் வெளியேறக்கூடாது என்று கூடகேட்டுவிட்டது முடிவாக. கேட்டால் என்ன? அவர்கள் 'தியாகிகள்' என்பதை 'மெயில்' மறக்காது இருந்திருக்குமானால், இந்தக் கேள்வியை மந்திரிகள் முகத்தின்மீது வீசி இருக்காது!

2[illegible]-7-50 ந்தேதி வெளிவந்த 'மெயில்' பத்திரிகை தன்னது நிருபர் தீட்டியுள்ள உருக்கமானதோர் பஞ்சக் காட்சியைத் தந்துள்ளது. அதன் சாரம் இது.

சென்னையை ஒட்டியுள்ளது நாவலூர் கிராமம். செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள அச்சிற்றூரில் 150 நபர்கள் வசிக்கிறார்கள். ஆண், பெண், குழந்தை அந்தப்பட்டிக்குள் அடக்கம். அவர்கள் பெரிதும் உழவு செய்து வாழ்பவர். அவர்கள் உழவு செய்வது சொந்த நிலத்தில் என்று எண்ணிவிடவேண்டாம்; பிறர் நிலத்தில்தான்.

மூன்று ஆண்டுகளாக மழை இல்லை. அவர்களுக்கும் வயலிலே கால்வைக்க வேண்டிய வேலை இல்லை. வேலை இல்லாததினால், பல மாதங்களாகவே, நாவலூர் வாசிகள் நடைப்பிணங்களாகி, நல்ல பிணங்களாக மாற, அதற்கான பாதையில் நடந்துகொண்டு இருக்கிறார்கள்.

ஏதோ சிற்சில சமயங்களில், ஏதாவது தொழில் கிடைத்தால், அதனைச் செய்து அணுக்கணக்கில் கூலி பெறுவர் நாவலூர் குடும்பத்தலைவர்கள். அப்படி அருபொருளாகக் கிடைத்த காசுக்கு ஏதாவது வாங்கி, வயிற்றை நிரப்பி உயிரோடு இருந்து, அடுத்துவரும் பொதுத்தேர்தலில், மஞ்சள் பெட்டியில் தங்கள் வாக்குகளைப் போடவேண்டியவர்களாயிற்றே, அவர்களுக்கு ஏதாவது உணவுப் பொருள் கிடைத்தால் தானே அது சாத்தியமாகும்? அங்குள்ள ரேஷன் கடையிலே உணவுப் பொருள் கிடைப்பதில்லை சில வாரங்களாகவே.

ஏழை எளியவர்கள் எல்லாம் தேசிய சேமிப்பு நிதியில் தங்கள் ஒவ்வொருவராலும் முடிந்த அளவு சேமிப்பதற்காகத்தான் ரேஷன் கடைகளில் உணவு தான்யங்கள் இல்லாமல் இருக்கிறது என்பதை நாவலூர் ஏழைகளால் எப்படி அறிந்து கொள்ளமுடியும்?

நாட்டுநலன் — முன்னேற்றம் முதலியவற்றைக்காட்டிலும்நாவலூர் ஆண்களுக்கு தங்கள் பசி, தங்கள் பெண்டு பிள்ளைகளின் பசிதான் பெரிதாகப் போய் விட்டது! எனவே, தலையில் சுமந்துவருகிற ஏழை அபலைகளிடமிருந்து படி ஒன்றுக்கு ரூ. 1-10-0 முதல் ரூ. 1-12-0 வரையில் கொடுத்து தங்கள் சக்திக்கேற்ப அரிசி வாங்கி சிறிது பசியாறிவந்தார்கள். அதுவும் எப்பொழுதும் தாராளமாகக் கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காத நாட்களில் எல்லாம் அவர்கள் காற்றையே கிண்ணியில் இட்டு உண்டுவந்தார்கள்! நமது உணவு மந்திரி முன்ஷிஜி வாரத்துக்கு ஒரு

நாள் உண்ணா நோன்பு இருங்கள் என்று உபதேசிக்கிறார்.

ஆனால் நாவலூர் வாசிகளோ பல நாளாகவே, முன்ஷிஜியின் யோசனையைக் கேள்விப்படாத நிலையிலேயே, நிரந்தரமாக உண்ணாநோன்பு அனுஷ்டித்து வருகிறார்கள். உண்ணாவிரத யோசனை வெளியிட்டதின் பலனாக வரும் பெருமை உணவு மந்திரியை போய் அடைய முடியாமலே, தங்களையும் அறியாமல் செய்துவிடுகிறார்கள் நாவலூர் வாசிகள்.

"அரிசியோ கிடைக்கவில்லை; விலை கூடுதலாக இருப்பதால் காய்கறிகளையோ வாங்க முடிவதில்லை: கேழ்வரகும்கூட கிடைப்பதில்லை, இந்த நிலையில் உண்மையில் நீங்கள் என்னதான் சாப்பிடுகிறீர்கள்?"

இந்தக் கேள்வியை ஒரு பெண்ணைப் பார்த்து கேட்கிறார் நிருபர்.

கண்களில் நீர் சொரிய அந்த மாது குடிசைக்குள் சென்று, சில கடலைப் பிண்ணாக்குத் துண்டுகளை எடுத்துக்கொண்டு வந்து, இவைகளைத் தான் நாங்கள் சாப்பிடுகிறோம் என்று காண்பித்தாள்.

அங்கே இரு குழந்தைகள், ஒன்றுக்கு வயது ஐந்து, மற்றொன்றுக்கு மூன்று, மேலே தோல் போர்த்த எலும்புருவங்கள். பிண்ணாக்கும் கையுமாக வந்தவளைப் பார்த்ததும், பரிதாபத்தோடு தின்பதற்குப் பிண்ணாக்குக் கொடுக்கும்படியாகக் கெஞ்சின அக்குழந்தைகள்.

அந்தக் குடும்பத்தின் குலவிளக்குகள், சிறு பிண்ணாக்குத் துண்டுகளுக்கு அடித்துக்கொள்ளுகின்றன.

இந்த சோகக் காட்சியைக் கண்ட நிருபருக்கு இருதயமே நின்றுவிட்டதுபோல் இருந்ததாம், அந்தக் குழந்தைகளுக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத நிருபரின் நிலையே இதுவானால், அக் குழந்தைகளைப் பெற்று வளர்த்த தாய் தந்தையின் கதி எப்படி இருந்திருக்கும்?

இந்தக் காட்சியைப் பார்த்த வண்ணம் தாயும் தந்தையும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் வாய் திறக்கவில்லை; கண்கள் ஒரு சொட்டு நீரும் சிந்தவில்லை. என்ன காரணம் தெரியுமா? கண்ணீர் சிந்தவும் சக்தியற்ற நிலையில் அவர்கள் இளைத்துப்போய் இருந்தார்கள், பலமிழந்திருந்தார்கள் என்று நிருபர் குறிப்பிடுகிறார்.

இந்தக் கொடுமை ஒருநாள் சம்பவமாக மட்டும் இருந்திருக்குமானால், கண்டிப்பாகக் குழந்தைகளைப் பெற்றவர்கள் கண்ணீர் விட்டுத்தான் இருப்பர்—வாய்விட்டு அலறித்தான் இருப்பர். ஆனால் பல நாள் சம்பவமாகப் போய்விட்டதால் - கதறினாலும் பலனில்லை, அழுதாலும் ஆகப்போவது ஒன்றுமில்லை என்ற உண்மையை அனுபவத்தால் கண்டிருக்கின்ற பெற்றோர்களின் மனம் கல்லாகவோ இரும்பாகவோ மாறித்தானே போயிருக்கும்?

"அக் குழந்தைகள் மரணத்தை நெருங்கிக்கொண்டு இருக்கிறார்கள் பட்டினியால். எவ்வளவு நெருக்கம் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் ஒவ்வொரு நாளும் அவர்கள் மரணப் பாதையில் நிச்சயமாகச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்கள் நிலையும் அதுவேதான்." என்று நிருபர் நாவலூர் வாசிகளின் தற்கால நிலையைத் தீட்டிக் காட்டுகிறார்.

இந்த நாவலூர் வாசிகளை யார் என்று கருதுகிறீர்கள்? பிர்மாவின் முகத்தில் பிறந்தவர்களா? இல்லை. சைவ முதலியார்களா? இல்லை இல்லை. பின், வேறு யார்தான்? ஆதித்திராவிடர்கள்— தாழ்த்தப்பட்டவர்கள்—தீண்டப்படாதவர்கள்—என்றெல்லாம் கூறப்படுபவர்கள்; அரிஜனங்கள் என்ற திருநாமம் தாங்கி இருப்பவர்கள்

அடுத்த 29-7-50-ல் அதே நிருபர், செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த செங்கல்பட்டு தாலுக்காவிலும் சைதாப்பேட்டைத் தாலுக்காவிலும் உள்ள சில கிராமங்களுக்குச் சென்றார். இம்முறை தனித்துச் செல்லவில்லை. உடன் புகைப்படம் பிடிப்பவரையும் அழைத்துச் சென்றார்.

பாடூர் சேரிக்கு அவர் சென்றார். அங்குள்ள குழந்தைகளை — எலும்புருவங்களை புகைப்படம் பிடித்தார். வெறும் எலும்புக்கூடுகளாக அவைகள் இருக்கின்றன. குழந்தைகளிடம் காணப்படும் குறும்புத்தனம் இல்லை. துடிதுடிப்பில்லை. சோக உருவங்களாக அவைகள் காட்சி தருகின்றன.

நிருபர் இருந்த மிடுக்கைப் பார்த்துவிட்டு, அவரை யாரோ உணவு அதிகாரி என்று தவறாக எண்ணிக்கொண்டு 'ஐயா! எங்களை ஏன் பட்டினிப்' போடுகிறீர்கள்?' என்று நிருபரைக் கேட்டனராம் அச் சிறுவர்கள்.

அந்தச் சேரியிலுள்ள பெரியவர்களும் ஆண் பெண் அடங்கலும் எலும்புருவங்களாகத்தான் இருக்கிறார்கள். "ரேஷன் கார்டு இருக்கிறது, ஆனால் தானியம் மட்டும் கிடைப்பதில்லை. எங்களை எதைச் சாப்பிடச் சொல்லுகிறீர்கள்?" என்று நிருபரை அவர்கள் கேட்டார்கள். வாயினால் கேட்கத்தான் செய்தார்கள். பரம சாதுக்கள்! மரணத்தோடு போரிடும் நிலையிலும் பொறுமையோடு இருக்கும் நல்லவர்கள்!

'சுகாதார வாரம்' 'குழந்தைகள் வாரம்' என்றெல்லாம் நமது மாகாண சர்க்காரும், ஸ்தலஸ்தாபனங்களும் ஆண்டுக்கொருமுறை விழாக் கொண்டாடி, அங்கங்கே, கொழுகொழு என்று இருக்கின்ற குழந்தைகளுக்கு, ஏதாவது பரிசுகொடுக்கின்றார்களே, அதுபோல், பஞ்சத்தால் இளைத்து, பட்டினியால் தேய்ந்து, உருக்குலைந்து கிடக்கும் 'சிறார்கள்வாரம்' என்று ஒரு விழாவினை நமது சர்க்கார் கொண்டாட முன்வருமானால், முதல் பரிசு பாடூர் ஏகாம்பரம் என்னும் சிறுவனுக்குத்தான் கொடுத்தாகவேண்டும். வயது பன்னிரண்டு இருக்குமானாலும், பார்த்தமாத்திரத்தில் அவன் வயதை நிர்ணயித்துக் கூறமுடியாத அளவிற்கு, ஏகாம்பரம் இளைத்து எலும்புக்கூடாகக் காட்சி தருகிறான். பாடூர் சேரியில் இன்னும் உயிரோடு இருக்கும் சிறுவர் பட்டினிப் பட்டாளத்தின் 'காப்டன்' ஏகாம்பரந்தான் என்று சொல்வதே மிகமிகப் பொருத்தமாக இருக்கும்!

நாவலூர் கிராமத்துக்கு மீண்டும் நிருபர் போனார். நிருபரைக் கண்டு மக்கள் கண்ணீர் விட்டுக் கொண்டே, "நீங்கள் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் இல்லை என்று கூறினதால், நாங்கள் பிண்ணாக்கையே தின்று உயிரோடு இருந்துவரும் உண்மையை ஒளிக்காமல் உங்களிடம் கூறினோம். அதனால் எங்களுக்குத் தொல்லைதான் வந்தது"—என்று கூறினார்கள். நிருபர் திகைத்துப் போய், விளக்கம் கேட்டார்.

நாவலூருக்கு கலெக்டர் விஜயம் செய்து, 'நீங்கள் எல்லாம் பிண்ணாக்குதான் தின்று கொண்டு இருப்பதாக உங்களில் எவர் நிருபரிடம் கூறியது?' என்று கோபித்துக் கொண்டதாக நிருபரிடம் அவர்கள் கூறினார்கள். நாவலூர் மக்களிடம் நயமாக உரையாடி இருந்தால், வந்தவர் கலெக்டர் என்பதை, நாவலூர் வாசிகளால் எப்படி புரிந்துகொள்ள முடியும்? எனவேதான், கலெக்டர், தான் யார் என்பதைப் புரிய வைப்பதற்காகக்கொஞ்சம் கம்பீரமமாகப் பேசி இருக்கிறார்—அதிகாரம் செய்திருக்கிறார்! ஐயோ பாவம்! இந்த உண்மையைக் கூட நாவலூர் மக்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை!

கலெக்டரிடமும் பிண்ணாக்கு புராணத்தைப் படிக்கவே, அந்தச் சேரிக்குக் கொஞ்சம் கோதுமை அனுப்ப ஏற்பாடு செய்தார் ஜில்லா அதிகாரி. குடிமக்களிடமே கோபம் காட்டிய கலெக்டர் துரை, தன்னுடைய அதிகாரத்துக்கு அடங்கிக் கிடக்கவேண்டிய கிராம முன்சிப்பை ஆட்டிப் படைக்காமலா இருந்திருப்பார்? கொஞ்சம் மிரட்டி இருப்பார்-அதட்டி இருப்பார்—'தொலைத்து விடுகிறேன் பார்' என்று கிராம முன்சீப்பிடம் ஆர்ப்பாட்டம் செய்திருப்பார். கலெக்டர் கோபத்திற்கு ஆளான கிராம முன்சீப்பு, அந்தக் கோபத்தால் ஏற்பட்ட மனப் புழுக்கத்திற்கு நஷ்டஈடு செய்துகொள்வதற்காகவோ என்னவோ, தன்னைக் கலக்டரிடம் தங்களையும் அறியாமல் காட்டிக் கொடுத்த, நாவலூர் சேரிவாசிகளிடம் தர்பார் நடத்தத் தொடங்கிவிட்டார். 'எதிர் காலத்தில் உணவு தான்யத்திற்குப் பதில் வெறும் பிண்ணாக்கையே உங்களுக்குக் கொடுக்கச் செய்கிறேன் பாருங்கள்' என்று சாபம் கொடுத்திருக்கிறாராம் அந்த மகானுபாவர். உணவு மந்திரி முன்ஷிஜிக்குப் பதில், இந்த கிராம முன்சீப்பையே, அவரிடத்தில் அமர்த்திவிட்டால், நாவலூர் சேரிக்கு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டுக்கே பிண்ணாக்கை முக்கிய உணவாக ஒரே உத்தரவில் மாற்றிவிடுவார் அவர்.

பாடூர் கிராமச்சேரியில் மொத்தம் 300 குடிசைகள் இருக்கின்றன. குழந்தைகள் உள்பட 1500 ஆண் பெண்கள் அந்தச் சேரியில் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் உழவர்கள். வானம் காய்ந்து விட்டதால் அவர்கள் அனைவரும் வேலை எதுவுமின்றி தவிக்கிறார்கள். சென்ற இரண்டு வாரத்துக்கு அதிகமாக அங்கு அரிசி கிடைப்பதில்லை. நல்ல விளைவு இருந்த காலத்தில் கூட அவர்கள் முழு வயிறு உண்டிருப்பார்கள் என்று சொல்வதிற்கில்லை. இருந்தாலும் கேழ்வரகுக் கூழை வயிறு நிறையக் குடித்துவிட்டு, நல்ல பலத்தோடு பிறருக்கு உழைத்து வந்தார்கள். கேழ்வரகு கிடைக்காத நிலையில் அவர்கள் எங்கிருந்து பாடுபடுவதற்கான பலமுடையவர்களாக இருக்க முடியும்?

வேலை இல்லாமை அவர்களை ஒரு பக்கம் வாட்டி வதைக்க, ரேஷன் கடைகளில் வாரக் கணக்கில் சேர்ந்தாற் போல் உணவுப் பொருள் எதுவும் கிடைப்பதில்லையானால், அந்தச் சேரிவாசிகள் தேய்ந்த உருவங்களாகப் போகாமல் பின் எப்படி இருக்கமுடியும்?

முன்னர் குறிப்பிட்டுள்ள பாடூர் ஏகாம்பரம் என்னும் சிறுவனின் குடும்ப வரலாறு கண்ணீர் பெருக்க வைக்கும் ஒரு கதை.

அவன், இளமையிலேயே தந்தையை இழந்து விட்டவன். அவனுடைய விதவைத்தாய் கண்ணியமாக உழைத்து, தானும் வாழ்ந்து, அவனையும் காப்பாற்றி வந்தாள். நன்கு பாடுபடக்கூடிய அங்கு[illegible]

ஆண்களுக்கே வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கும் போது, இந்த அபாக்கியவதிக்கு எங்கிருந்து தினம் தினம் வேலை கிடைத்துக் கொண்டு இருக்கும். வேலை கிடைக்கும் நாட்களில் வேலை செய்து சில செப்புக் காசுகள் கூலிபெறுவாள். அந்தக் காசைக் கொண்டு எப்படி கால்வயிறுவது சாப்பிடுவது ரேஷன் கடையில் ஒன்றுமே தானியம் கிடைப்பதில்லை என்ற நிலையில். தாயும் தேய்கிறாள். ஏகாம்பரமும் துரும்பாகிறான். துருப்பிடிக்க ஆரம்பித்துவிட்ட பின்னர், இரும்புத் தூணாக இருந்தாலும் சிலநாளில் உருவிழந்து உடைந்துதானே போகும்?

ஏகாம்பரம், இந்த நாட்டின் எதிர்கால பிரஜையாக ஆகவேண்டுமானால், அவனுக்கு எவ்வளவு சத்துள்ள ஆகாரத்தைக் கொடுத்தாக வேண்டும் தெரியுமா? ஒரு ஏகாம்பரம் தான் இந்த நாட்டில் உள்ளான் என்று எண்ணிவிடக் கூடாது. நூற்றுக்குத் தொண்ணூறு சிறுவர்கள் இந்நாட்டில் ஏகாம்பரங்கள் போல்தான் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்தப் பஞ்ச காலத்தில்தான் இந்தக்கதி எனக் கொள்ள வேண்டாம்; நீண்ட காலமாகவே இதே அவதிதான் இங்கு.

**பேட்டை** கிராமம் சைதாப்பேட்டை தாலுக்காவிலுள்ள ஒரு கிராமம். அந்தக் கிராமத்திற்கு நிருபர் விஜயம்செய்கிறார். அங்குள்ள கிராமவாசிகளில் அதிகம் பேர் நாய்க்கர் மார்கள். நல்ல பகலாக இருந்தும், வேலை எதுவும் செய்யாமல், தங்கள் குடிசைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள் அங்குள்ள வயதுவந்த ஆண்கள். செய்வதற்காக வேலை இருந்து சோம்பேறிகளாக உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை அவர்கள். வேலை கிடையாது செய்ய. உண்ண உணவு கிடையாது. எனவே, வேறு வழி இல்லாமல்—தோன்றாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உடல்தான் அசைவற்று இருக்கிறதேயன்றி, உள்ளம்—அப்பா—என்னென்ன எண்ணிக்கொண்டு இருக்கும்?

அந்த இடத்தில் நான்கு குழந்தைகள்—மூன்று வயது முதல் பதினெட்டு மாதம் வரையில் வயதுடையவை-ஒரு பனம் பழத்தைப் பங்குபோட்டு தின்பதற்கு எதிர்நோக்கிக் கொண்டு இருக்கின்றன. பனம்பழத்தைச் சுட்டுப் பக்குவப் படுத்தியது மூத்த குழந்தை. மற்ற மூன்று குழந்தைகளும் அந்தப் பனம்பழத்தை இமை மூடாமல் பார்த்துக்கொண்டு இருக்கின்றன.

அங்கு, பக்கத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த கிழவனை நோக்கி, ரேஷன் அரிசி இங்கு சரியாகக் கிடைக்சிறதா என்று கேட்டார் நிருபர். ஆசாமி பதில் கூறுவதற்குள், குடிசைகளில் இருந்த சில பெண்கள் ஓடிவந்து, நிருபரை, கலெக்டரோ வேறு அதிகாரியோ என்று நினைத்துக் கொண்டு, உணவுப் பிரச்னை பற்றின கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்டு அவரை திக்குமுக்காட வைத்துவிட்டனர்.

"ஏன் இப்படி எங்களைப் பட்டினி போடுகிறீர்கள்? எங்கள் சிறுவர்கள் உணவின்றி பட்டினியால் வதைகிறார்கள். காலை, பகல், இரவு மூன்று வேளையும் பனம்பழம் தின்றே காலங் கழித்துவருகிறார்கள்" என்று கூறி கண்கலங்கினார்கள்.

இந்த இதயத்துடிப்புக்கு யார் பதில் கூறுவது? நிருபரா? முடியுமா அவரால்? மாகாண உணவு மந்திரியே டெல்லி நோக்கித் தவங்கிடக்கும்போது, நிருபரால் என்ன செய்ய முடியும்?

பேட்டை ஊருக்குள்ளே நுழைகிறார். எல்லா இடத்திலும் ஒரேவிதமான வேதனை தரும் பஞ்சக் காட்சியைக் காண்கிறார். பனம்பழமும் கிடைக்காத துர் அதிர்ஷ்டசாலிகளையும் காண்கிறார் நிருபர். அவர்கள் உட்கார்ந்து—உட்கார்ந்து — உட்கார்ந்து கொண்டே இருக்கிறார்கள்! என்று சித்தரிக்கிறார்.

குழந்தைகள், பட்டினியின் தாக்குதலால், தங்களுடைய எலும்பான தேகத்தைத் தாங்கிக்கொண்டு நடமாட முடியாத தன்மையால், தூங்குகின்றன—தூங்குகின்றன — தூங்கிக் கொண்டே இருக்கின்றன! என்றும் தீட்டிக்காட்டுகிறார் நிருபர். நிலைமை இப்படியே நீடிக்குமானால், ஒரே தூக்கமாக அக்குழந்தைகள் தூங்கிவிடும் நாள் இன்னும் அதிக தூரத்தில் இல்லை.

பேட்டை, ஷோலிங்க நல்லூர், படூர், நாவலூர், தாலம்பூர், பொன்மார், காரணி, இந்தக் கிராமங்களுக் கெல்லாம் நிருபர் அன்று போயிருக்கிறார். உள்ளத்தை உருக்கும், பஞ்சத்தால் தாக்குண்டு தத்தளிக்கும் தாய்மார்களை, தவித்துக் கிடக்கும் குழந்தைகளை, தப்ப மார்க்கம் தெரியாது துடித்துக்கொண்டிருக்கும் ஆடவர்களை, பிறந்த வீட்டைவிட்டு வெளியேறாத

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon)